# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 43 • 15.09.2019

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com


# நாளை ‘எழுக தமிழ்’ எழுச்சிப் பேரணி



## பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரள்கிறார்கள்

# ‘எழுக தமிழ்’ வெற்றி,

## ஈழத்தமிழர் உரிமை மரபுக்கான பெரும் சக்தி

அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையத்தின் பணிவான வேண்டுகோள்

## எழுக தமிழ் சர்வதேசத்திற்கும், சிறீலங்காவிற்கும் அழுத்தத்தை ஏற்படுத்தும்

எழுக தமிழ் ஏற்பாட்டுக்குழு இணைப்பாளர் சிவரூபன் இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு நேர்காணல்



## புதிய சிந்தனையை உருவாக்கவும், விடுதலைக்கு வழிதேடவும், புதுவாழ்வு காணவும் எழுக தமிழா

மு.திருநாவுக்கரசு



## நாளை எழுக தமிழ்

நிலாந்தன்

# தமிழினத்தின் விடியலுக்கான ‘எழுக தமிழ்’ எழுச்சிப் பேரணி நாளை

**தமிழ்த் தேசிய அனைத்து சக்திகளும் பூரண ஆதரவு ஹர்த்தாலால் முடங்குகிறது தமிழர் தாயகம்**

**தமிழகத்திலும், ஐ.நா முன்றல்களிலும் மக்கள் அலை புலம்பெயர் தேசங்களில் பல ஆதரவு போராட்டங்கள்**

தமிழர் தாயகத்தில் தொடர்ந்து இடம்பெற்று வரும் திட்டமிட்ட அரச ஆதரவு பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடன்




நிறுத்தக் கோரியும், இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்காமல் காலம் கடத்தும் அரசின் கபடத்தனத்தை சர்வதேச உலகிற்கு தெரியப்படுத்தவும், வலிந்து காணாமலாக்கப் பட்டவர்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைக் கோரியும், போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலைச் செய்து நீதியை நிலைநாட்டக் கோரியும் சர்வதேச சமூகத்தின் தலையீட்டை உடன் வலியுறுத்தியும் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எழுக தமிழ்—2019 மக்கள் எழுச்சிப்பேரணி நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

### பேரணியின் நகர்வு

நல்லூர் ஆலய முன்றலிலும், யாழ். பல்கலைக்கழக முன்னறலிலும் காலை 9மணிக்கு ஏக நேரத்தில் ஆரம்பமாகும் இரண்டு பேரணிகள் கந்தர்மடம் நோக்கி நகர்ந்து கந்தர்மடம் சந்தியில் ஒருங்கிணையவுள்ளன. அங்கிருந்து நாவலர் வீதியூடாக கஸ்தூரியார் வீதியை அடையும் மாபெரும் எழுச்சிப் பேரணி, ஸ்டான்லி வீதியூடாக கே.கே.எஸ் வீதியை அடைந்து அங்கிருந்து யாழ்.முற்றவெளி மைதானத்தினை நோக்கி செல்லவுள்ளது.

முற்றவெளி மைதானத்தில் அலையென திரண்டிருக்கும் மக்கள் மத்தியில் எழுக தமிழ் 2019 பிரகடனம் நிறைவேற்றப்படவுள்ளதோடு அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக தரப்பினரின் காத்திரமான உரைகளும் இடம்பெறவுள்ளன.

### உள்ளூர் தளத்தில் பெருகியுள்ள ஆதரவு

எழுக தமிழ் எழுச்சிப்பேரணிக்கு, தமிழ் மக்கள் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஜனநாயக போராளிகள் கட்சி

தொடர்ச்சி 13ம் பக்கம்

# தமிழ் மக்களின் உரிமைக்காக முன்னெடுக்கப்படும் ‘எழுக தமிழ்’ பேரணியை புறக்கணிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

தமிழர்களின் ப10ர்வீகத்தாயகமாக வடக்கு கிழக்கில் தமிழர்களின் இருப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் இழக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிகோரியும்ஐஐ ஏழுதசாப்த அபிலாஷ~களை நிறைவேற்ற வலியுறுத்தியும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் எழுச்சியுடன் நடைபெறும் எழுக தமிழ்—2019 பாரிய மக்கள் போராட்டத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றாக புறக்கணிக்கவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்ஐஐ இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜாஐஐ பங்காளிக்கட்சிகளின் தலைவர்களான சித்தார்த்தன்ஐஐ செல்வம் அடைக்கலநாதன்ஐஐ கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் சிவஞானம் சிறிதரன் உள்ளிட்டவர்கள் இப்பேரணியை குழப்பபோவதில்லை என்றும்ஐஐ அதற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் மேலெழுந்தவாரிய அறிவித்தாலும் தாம் பங்கேற்கப்போவதில்லை என்பதை உறுதிபடத் தெரிவித்து ள்ளனர்.

இதேவேளை கட்சியின் தலைமையின் முடிவுக்கு அமைவாக ஏனைய வடக்கு கிழக்கில உள்ள கூட்டமைப்பின் பாராளுமன்ற



மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் பங்கேற்கப்போவதில்லை என்று தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது.

புலீதிக்கப்பட்ட மக்களும் சிவில் சமூக அமைப்புக்களும் சிறீலங்கா அரசிற்கு ஐ.நா.மன்றமானது கால அவகாசம் வழங்கக் கூடாது என்று வலியுறுத் தியபோது கூட்டமைடப்பானது இலங்கை அரசிற்கு கால அவகாசம் வழஙகவேண்டும் என்று ஐ.நா.விடம் கோரிக்கை விடுத்தார்கள்;

எனவே இந்த இலங்கை அரசிற்கு எதிராக இடம்பெறும் இந்த பேரணியில் இலங்கை அரசின் ஆதரவு நிலைப்படடைக்கொண்ட கூட்டமைப்பினர் ஒருபோதும் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# எழுக தமிழ் பேரணியில் பங்கேற்பது ஒவ்வொரு தமிழர்களின் வரலாற்று கடமை ஆகும்

**எழுக தமிழுக்கு தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அழைப்பு**

"தமிழ் மக்கள் பேரவையால் எழுக தமிழ் எழுச்சி பேரணி நிகழ்வு முக்கியமான ஒரு கால கட்டத்தில் நடத்தப்படுகின்றது. தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருப்பதை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதற்கும், அழுத்தங்களை அதிகரிப்பதற்கும் இது போன்ற மக்கள் போராட்டங்கள் அவசியம். அதனால், அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் ஒவ்வொரு தமிழர்களும் , அமைப்புக்களும், இந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்வது அவசியம்" என எழுக தமிழ் பேரணி குறித்து தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அழைப்பு விடுத்திருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் நாளை காலை திங்கட் கிழமை நடைபெறுகின்ற எழுக தமிழ் பேரணி தொடர்பில் அரசியல் அவதானிப்பு மையம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிப் படுத்தும் முகமாகவும், இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கான அவசியத்தை வலியுறுத்தவும் எழுக தமிழ் பேரணி தமிழ் மக்கள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்தப் பேரணி, முக்கியமான ஒரு கால கட்டத்தில் நடத்தப் படுகின்றது. சனாதிபதித் தேர்தலுக்கான பேரம் பேசல்கள் சூடுபிடித்துள்ளன. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 42 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகி யிருக்கின்றது. இந்தப் பின்னணியில், தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருப்பதை வெளிப்படுத்துவதற்கு இது போன்ற பலம் வாய்ந்த மக்கள் பேரணி ஒன்று அவசியமாகிறது.தமிழ் மக்களுக்கு இன்றைய தேவை என்ன? அவர்களுடைய அபிலாசைகள் என்ன? இன்று அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்ன? என்பதை சிறீலங்கா அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்த வேண்டிய அவசரமான ஒரு தேவை இப்போது மீண்டும் ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களுடைய அரசியலை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு இது போன்ற மக்கள் எழுச்சி அவசியம். காலத்தின் தேவையாகவுள்ள இந்த எழுச்சியில் தமது பங்களிப்பைச் செய்ய வேண்டிய பொறுப்பு தமிழ் அமைப்புக்களுக்குள்ளது. இது தமிழ் மக்கள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் கூட, இது மக்களுக்கானது. மக்களை ஒரு திரட்சியாக

தொடர்ச்சி 13ம் பக்கம்

## தியாக தீபம் திலீபனின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு!



ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீர் கூட அருந்தாமல் 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த தியாக தீபம் திலீபனின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது நினைத் தூபியில் உணர்வெழுச்சியுடன் கடைபிடிக்கப்பட்டது

# திலீபனின் நினைவேந்தலும் 'எழுக தமிழ்' நிராகரிப்பும்

**கூட்டமைப்பின் போலித் தேசியம் அம்பலமாகியது: மக்கள் கடும் விசனம்**

எமது விடுதலைக்கான தம் இன்னுயிர்களை ஈகம் செய்த விடுதலை மறவர்களை பயன்படுத்தி போலித் தமிழ் தேசிய அரசியலை முன்னெடுக்கும் கூட்டமைப்பின் அரசியல் நாடகம் அம்பலமாகியுள்ளதாக தாயக உறவுகள் கடும் சினத்துடன் விசனம் வெளியிட்டுள்ளனர். இதுதொடர்பில் மக்கள் பலர் தமது உள்ளக்கிடக்கையை எம்முடன் பகிர்ந்தனர். அவ்விடயம் வருமாறு,

தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியின் பாதுகாப்பும், பராமரிப்பும் யாழ்.மாநகர சபைக்கானது என்று வடமாகாண சபையின் தவிசாளரும், இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ்.கிளையின் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் மாநகர முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார். திலீபனின் 32ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மேயர் ஆர்னோல்ட், "திலீபனை நினைவு கூர்ந்த மேயர்" என்ற பிரசாரத்தினை செய்வதற்காக தனது தலைமையில் அந்நிகழ்வினை நடத்துவதற்கு தீர்மானித்தார். தனது சுயலாப நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அந்நிகழ்வினை இன்றையதினம் முன்னெடுத்தும் இருந்தார்.

இரசையா பார்த்தீபன் என்ற இயற்பெயரைக்கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் யாழ்.மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளரான லெப்டினன் கேனல் திலீபன் 1987ஆம் அண்டு செப்டம்பர் 15ஆம் திகதி, மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும், சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் ஆகிய ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரையிலான உண்ணாவிரதப்போராட்டத்தினை முன்னெடுத்து அதேமாதம் 26ஆம் திகதி தனது இன்னுயிரை ஈகம் செய்திருந்தார்.

ஆனால் அவருடைய கோரிக்கைகளில் ஒன்று கூட தற்போது வரையில் நிறைவேற்றப்பட்டதாக இல்லை. உரிமைப் போராட்டம் முள்ளிவாய்க்கால் அவலங்களுடன் நிறைவுக்கு வந்தபின்னர் தசாப்தமொன்றை கடந்திருக்கின்றபோதும் திலீபனின் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்படுவதாகக் கூட இல்லை. இந்நிலையில் தான் தமிழ் மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் தாயகமெங்கும் சுழற்சியாக முன்னெடுக்கப்படுகின்றது. அந்த போராட்ட வடிவங்களில் அதியுச்சமாகவே எழுக தமிழ்ப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அப்போராட்டத்தில் தியாக தீபம் திலீபன் ஐந்தம்சக் கோரிக்கைகளும் உள்ளடங்காமலில்லை என்பதை மனச்சாட்சி உள்ள எந்தவொரு தமிழ் மகனும் மறுக்க மாட்டான் என்பது கண்கூடு. அவ்வாறிருக்க, தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வினை முண்டியடித்துக்கொண்டு முன்னெடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதே கோரிக்கைகளுக்காக மக்கள் ஒருங்கிணைவில் முன்னெடுக்கப்படும் மாபெரும் எழுச்சிப் போராட்டமான எழுக தமிழில் பங்கெடுக்காமையானது அவர்களின் கொள்கை, கோட்பாடு, சிந்தனை என அனைத்திலும் உள்ள முரண் நகையையும், இரட்டை வேடத்தினையும் அப்பட்டமாக தோலுரித்துக் காட்டிவிட்டது. இவ்வாறானவர்கள் தமிழ்த் தேசியவாதிகள் என்று கூறி போலித்தேசியம் பேசிக்கொண்டும், உரிமைகளுக்காக போராடி மறைந்த மறவர்களைப் பயன்படுத்தி அவர்களின் பெயரால் பாராளுமன்ற உறுப்புரிமைகளையும் ஏனைய பதவிகளையும் பெறும் நோக்கத்தினை மட்டுமே மையப்படுத்திய தமது சுயலாப அரசியலையே முன்னெடுக்கின்றார்கள்.

# 'எழுக தமிழ்' வெற்றிக்குப் பங்களிப்போம்!

'எழுக தமிழ்' என்பது ஈழத்தமிழ் மக்கள் பெருந்திரளாக ஓரணியில் திரண்டெழுந்து தங்களுக்கான உரிமைகளை தங்கள் தாயகத்தில் அடைந்திட பேரணி நடத்தி உறுதி பூணும் மக்கள் எழுச்சிப் போராட்டம். எனவே தாயகத்திலும் உலகெங்கும் பரந்தும் வாழும் ஈழத்தமிழர்கள் அனைவரையும் இன்றைய தினத்தில் இந்த உறுதியினை உலகுக்கு வெளிப்படுத்திட இயன்ற அளவு பெருந்திரளாக எல்லா வேற்றுமைகளையும் கடந்து ஓரணியில் ஒன்றிணையுமாறும் ஆதரவுக் குரல்களையும், செயற்பாடுகளையும் செய்யுமாறும், அனைத்துலக ஈழத்தமிழர் உரிமைகள் மையம் முதலில் வேண்டுகோள் விடுக்கிறது.

மேலும் ஈழத் தமிழர்கள் தங்களது நல்லாட்சி, சனநாயகம், மனிதஉரிமைகள் என்பனவற்றைச், சிங்கள பௌத்த பெரும்பான்மை அரசாங்க முறைமை இலங்கையில் 1931 இல் காலனித்துவ காலப் பிரித்தானியப் பேரரசால் அறிமுகம் செய்யப்பட்ட நாள் முதல் இன்றுவரை அனுபவிக்க முடியாதுள்ளனர். இந்த நடைமுறை யதார்த்தத்தை உலகுக்கு எடுத்துரைத்து, உலக அரசாங்கங்களையும் அனைத்துலக நிறுவனங்களையும் தங்களுக்கு உதவுமாறு உலகின் மக்களாகவும் தாங்கள் உள்ளனர் என்ற உரிமையுடன் கேட்கும் நிகழ்வாகவும் எழுக தமிழ் அமைகிறது. இந்த உலக ஆதரவைப் பெறுவதற்கான தாயகத்தில் உள்ள ஈழத்தமிழ் மக்களின் அனைத்து முயற்சிகளுக்கும், உலகெங்கும் பரந்து தாங்கள் வாழும் நாடுகளின் குடிகளாகவும், அந்த அந்த நாடுகளின் இனத்துவச் சிறுபான்மை—யின மாகவும் உள்ள அனைத்துத் தமிழர்களும், தங்கள் தங்கள் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்தல் அவசியம். ஈழத்தமிழர்கள் நல்லாட்சி, சனநாயகம், மனித உரிமைகளை தங்கள் தாயகத்தில் மீளப் பெறுவதற்கு இது முக்கிய தேவையாக அமைகிறது.

ஈழத்தமிழர் வரலாற்றில் எந்தளந்தக் கோரிக்கைக்காக தியாகி திலீபன் 15 .09. 1987 இல் உண்ணா நோன்பை மேற்கொண்டு 26.09.1987 இல் 32 ஆண்டுகளுக்கு முன்னர் தன் இன்னுயிரை அர்ப்பணித்தாரோ அந்தக் கோரிக்கைகள் இன்றுவரை மாறாது உள்ளது என்பதற்கு இந்த 'எழுக தமிழ்' நிகழ்வில் முன்வைக்கப்பட்டுள்ள ஆறு கோரிக்கைகளும் தெளிவாக்குகின்றன.

இது சிறீலங்கா அரசாங்கத்திற்கு என்றுமே ஈழத்தமிழர்களைத் தனது குடிகளாகக் கருதும் தன்மை இல்லை என்பதைத் தெளிவாக்குகிறது. இந்நிலையில் ஈழத் தமிழர்களுடைய நிலங்களை திட்டமிட்ட முறையில் பௌத்த சிங்களமயப்படுத்தித் தமிழர்களின் குடித் தொகையை மாற்றியமைத்து சிறீலங்காப் பாராளமன்றத்தில் தமிழர்கள் பிரதிநிதித்துவம் பெறுவதைத் தடுத்து ஈழத்தமிழர்கள் நாட்டின் சட்டவாக்கத்தில் பங்குபற்ற முடியாது செய்தல் தமிழர்களின் சனநாயகப் பங்களிப்பைக் குறைக்கின்ற முயற்சியாகத் தொடர்கிறது. இதனைத் தடுப்பதற்கான மக்கள் குரலாக பல்லாயிரக்கணக்கில் ஈழத் தமிழ் மக்கள் கலந்து கொள்ளும் "எழுக தமிழ்" அமையும் என்பதுநம்பிக்கை.

அதேபோல இலங்கையின் நிர்வாகத்தின் அதி உச்சஅதிகாரங் கொண்ட அதிபர் தேர்தலில் ஈழத்தமிழ் மக்கள் மீது இனஅழிப்பை நடாத்தி யுத்தக் குற்றச் செயல்களையும், மனிதாயத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்தவர்களை வேட்பாளர்களாக நிறுத்தியும்,ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் கண்டனத்தையும் பொருட்படுத்தாது நாட்டின் தளபதியாகவும் அத்தகை யோரை நியமித்தும், சிறீலங்கா பகிரங்கமாகவே தமிழர்களுக்கு எதிரான சக்திகளை ஊக்குவித்து வருகிறது. இத்தகைய கால கட்டத்தில் வரும் 'எழுக தமிழ்' நிகழ்வு 09 முதல் 27 செப்டெம்பரில் நடைபெற இருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகவுன்சிலின் 42வது அமர்வுக்கு ஈழத் தமிழர்களுக்குத் தொடர்ந்தும் மனித உரிமைகள் மறுக்கப்படுவதையும், சிறீலங்காப் படைகளிடம் சரணடைந்தும், சிறீலங்காப் படைகளால் வலிந்து காணாமலாக்கப்பட்டும் போன பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் குறித்த பட்டியல் கூட இதுவரை வெளியிடப்படாது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்கு எதுவிதத் தகவல்களோ உதவிகளோ அளிக்காதிருக்கும் மனிதக் கொடுமையின் கொடூரத்தையும் எடுத்து விளக்குவதற்கான கருவியாகட்டும்.

இறுதியாக "எழுக தமிழ்" மூலம் மக்கள் சக்தியால் முன்னெடுக்கப் பட்டுள்ள ஆறு கோரிக்கைகளையும் தாயக மக்களுடன் சேர்ந்து உலக நாடுகளுக்கும், உலக அமைப்புக்களுக்கும் ஒரே அணியில் நின்று எடுத்துரைத்து நீதிகோரும் பயணத்தில் ஒன்றிணைந்து பங்கேற்பதே தாயகத்திலும், தமிழகத்திலும், உலகிலும் உள்ள ஈழத்தமிழரின் இன்றைய 'இலக்கு' ஆக அமையட்டும். உங்கள் பங்களிப்பிலேயே 'எழுக தமிழ்' வெற்றி தங்கியுள்ளது.

# எழுக தமிழ் எழுச்சிப் பேரணி 2019




அனைத்துலக ஈழத் தமிழர் உரிமை மையம்

# ‘எழுக தமிழ்’ வெற்றி, ஈழத்தமிழர் உரிமை மரபுக்கான பெரும் சக்தி

## அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையத்தின் பணிவான வேண்டுகோள்

ஈழத்தமிழர் வரலாற்றில் மீளவும் மக்கள் சக்தியைத் திரண்டெழ வைக்கும் சனநாயகப் போராட்டமாக ‘எழுக தமிழ்’அமைகிறது. ஈழத் தமிழர்கள் தங்கள் உயிரையும் உடலையும் நாளாந்த வாழ்வையும் போராடியே பாதுகாக்க வேண்டிய நிலையைச் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கங்கள் 1931இல் பொறுப்பாட்சியைக் காலனித்துவப் பிரித்தானிய அரசாங்கம் சிங்களப் பெரும் பான்மையினரிடம் வழங்கியது முதலாகத் தொடர்கதையாக்கி வருகின்றனர்.

இவ்வகையில் தமிழர்களின் போராட்டங்கள்தான் 1931 முதல் இன்று வரை கடந்த 88 ஆண்டுகளாக இலங்கையில் தமிழினமும், ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளும் முற்றாகச் சிங்கள பௌத்த பேரினவாத அரசால் அழிக்கப்பட்டு விடாது காத்து ஈழத்தமிழர் உரிமைகளைக் காக்கும் மக்கள் கேடயங்களாக வரலாறு படைத்து நிற்கின்றன.

அந்த வகையில் “எழுக தமிழ்” 2019ஐ ஈழத் தமிழர்களின் உரிமைகள் பாதுகாப்புக்குத் தமிழ் மக்கள் சனநாயக வழியில் சக்தியளிக்கும் பெரு முயற்சியெனவே நாம் பார்க்கின்றோம். எனவே “எழுக தமிழ்” வெற்றி ஈழத்தமிழர் உரிமை மீட்புக்கான பெரும்சக்தி என்பதை தாயகத் தமிழக உலகத் தமிழர்கள் ஒவ்வொருவரும் மனதிருத்தி “எழுக தமிழ்” ஈழத்தமிழர் உரிமைகளை மீட்பதற்கான பலத்தையும் வளத்தையும் அளிக்கவைக்க ஒன்றாக ஓரணியில் திரண்டெழுங்கள் என அனைத்துலக ஈழத்தமிழர் உரிமைகள் பாதுகாப்பு மையம் அழைப்பு விடுத்து, ‘எழுக தமிழ்’ நிகழ்வில் தன்னையும் ஒருமைப்படுத்திக் கொள்கிறது.

இம்முறை ‘எழுக தமிழ்’ ஆறு முக்கிய கோரிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. அவை வருமாறு :—

தமிழர்களை உனது குடிகளென அவர்களின் அரசியல் பணிவை ஆயுதமுனையில் தொடர்ந்து பெற்று வரும் சிறீலங்கா அரசாங்கமே...

1. உனது தமிழர்களின் தாயகப் பகுதிகளைப் பௌத்த சிங்கள மயமாக்கும் அனைத்துச் செயற்பாடுகளையும் உடனே நிறுத்து.




2. அனைத்துலகக் கண்காணிப்பிலான யுத்தக் குற்ற விசாரணைகளை பத்து ஆண்டுகளாக நடாத்தாது உள்ள நிலையை மாற்றி இனியும் காலந்தாழ்த்தாது, உடனே தொடங்கு.

3. மனச்சாட்சியின் கீழ் எதிர்ப்பை வெளிப்படுத்திச் செயல்பட்டமைக்காகவும், காரணமின்றியும், அரசியல் கைதிகளாக வைக்கப்பட்டு உள்ள தமிழர்களை உடனே விடுதலை செய்.

4. உனது படைகளிடம் சரணடைந்த போதும், உனது படைகளால் கைது செய்யப்பட்ட போதும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் குறித்த விபரங்களை வெளியிட்டு, அவர்கள் காணாமலாக்கப்பட்டமை குறித்த நீதி விசாரணைகளைத் தொடங்கு.

5. வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வுக்கு அச்சுறுத்தலாகவும், தமிழ் மக்களின் வாழ்வாதார நிலங்களையும் வீடுகளையும் ஆக்கிரமித்துத் தம்வசப்படுத்தி வைத்திருப்பவர்களாகவும் உள்ள, சிறீலங்காப் படைகளை மக்கள் வாழ்விடப் பகுதிகளில் இருந்து உடனே விலக்கி, வடக்கு கிழக்கை இராணுவமயப்படுத்துவதை நிறுத்தி, மக்களின் நிலங்களையும், வீடுகளையும் மீளவும் மக்களிடம் கையளித்து, அவர்களைச் சுதந்திரமாக வாழ விடு.

6.இடம்பெயர்ந்த புலம்பெயர்ந்த தமிழர்கள் அவர்கள் விருப்பத் தெரிவுக்கு ஏற்ப அவர்களின் வாழ்விடங்களுக்குத் திரும்பவும், புனர்வாழ்வு பெறவும், தேவையானவற்றை உடனே செய்

இந்த முன்னுரிமைக் கோரிக்கைகளின் அடிப்படையில் இலங்கையில் தமிழ் மக்கள் நல்லாட்சி, சனநாயகம், மனித உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு, வளர்ச்சிகளின்றி பின்தங்கியவர்களாக, வடக்கு கிழக்கில் 2009 இலிருந்து தவிக்கிறார்கள் என்பதை உலகிற்கு தெளிவாகவும், உறுதியாகவும், ஒரே தலைமையில் ஓரணியாக எடுத்துரைக்கும் நிகழ்வாக,“எழுக தமிழ்” வெற்றிபெறத் தாயக தமிழக உலகத் தமிழ் மக்கள் அனைவரும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் செயற்படுமாறு, பாதிப்புற்று இன்று வரை வாழ்வின்றித் தவிக்கும் ஈழத்தமிழ் மக்கள் சார்பாக, அனைத்துலக ஈழத்தமிழர் பாதுகாப்பு மையம் பகிரங்க வேண்டுகோள் விடுக்கிறது.

அனைத்துலக நாடுகளையும், அமைதிக்காகவும் மனித உரிமைக்காகவும் பாடுபடும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட அனைத்துலக அமைப்புக்களையும், “எழுக தமிழ்” மூலம் இலங்கைத் தமிழ் மக்கள் எடுத்துரைக்கும் உண்மைகளையும், தேவைகளையும், அனுதாபத்துடனும், அக்கறையுடனும் கேட்டு, அவர்களுக்கு அனைத்துலக சட்டங்களுக்கு ஏற்ப உதவுமாறு பணிவன்பாக அனைத்துலக ஈழத்தமிழர் உரிமைகள் பாதுகாப்பு மையம் கோரிக்கை விடுக்கிறது.

தாயகத் தமிழக உலக ஊடகங்களையும், சமூக வலைத் தளங்களையும், ‘எழுக தமிழ்’ மூலம் பாதிப்புற்ற ஈழத்தமிழ் மக்கள் எழுப்பும் குரலைப் பதிவு செய்து, அவர்களுக்கு நீதியும், பாதுகாப்பான அமைதியும் கிடைக்க உதவுமாறு அனைத்துலக ஈழத்தமிழர் உரிமைகள் பாதுகாப்பு மையம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறது.

## சங்கமிப்போம் எழுக தமிழில்

ஈழ வநி

பிறப்பாலே தமிழன் என்று பெருமைப்படும் எங்கள் இனமே
புறப்படுவோம் பதினாறு புரட்டாதி மாதமதில்
எழுக தமிழ் பேரணிக்காய் நீதிக்கான முழக்கத்திற்காய்
வரலாறு படைக்கவே எழுவோமே நாமே!

தலைவர் வழி நாங்கள் தாயகத்தை மீட்க – அன்று
ஆயுதத்தை ஏந்தினோம் பல வெற்றி வாகை சூடினோம்
சிங்களவர் சூழ்ச்சியில் சிக்கிக் கொண்ட நாங்கள் - இன்று
இழந்தோமே எத்தனையோ உயிர்கள் உடமையென

முற்றுப் புள்ளியென முள்ளிவாய்க்கால் அவலத்தை
மூடி மறைத்த சிங்களமே மூச்சு நின்றது எமக்கல்ல
குற்றமிழைத்த நீரெல்லாம் கூண்டுக்குள் செல்லும் காலம்
எங்களுக்கான நீதியாய் ஏற்றத்தில் இருக்குதே

வீரமறவர்கள் போரில் சிந்திய குருதிகள்
எங்களுக்கானதல்லோ அவர்கள் எங்கள் உறவுகளல்லோ
தசாப்தத்தை கடந்தும் கிடைக்காத நீதிக்காக
என்ன செய்தோம் எதைப் பெற்றோம்

பாட்டன் வைத்த மரக்கனி பாழ்கெட்ட பரம்பரைக்கா?
உரிமை கேட்ட உறவுகள் புனர்வாழ்வுச் சிறைக்குள்ளா?
கொண்டு சென்ற உறவுகளை கேட்பது குற்றமா?
உண்மைச் சாட்சியங்கள் சர்வதேசத்திற்கு போதாதா?

உயிர் எடுத்த பச்சை உடுப்பு எவ்விதம் பாதுகாப்பு
ஏன் இந்த கண்துடைப்பு இது சிங்களத்தின் இறுமாப்பு

சிறுபான்மை இனமென பேரெடுத்த நாமுமே
மூத்த இனமென காட்டுவோம் கயவர்க்கு

வாழ்க தமிழர் என வாசகம் சொல்வதால்
வாழ்வானா தமிழன் இழந்ததை மீட்டு
எழுக தமிழென எங்களின் குரல் ஓங்கிட
பெறுவோம் இழந்த உரிமையை மீட்டு

அரசியல் கயிற்றினால் இறுக்கப்பட்ட உரிமைகளை - பாவிகள்
அதிகார மமதையில் கட்டவிழ்த்த கொடுமைகளை
எதிர்கால தமிழன் நிரந்தர இருப்பினை
தட்டிக் கேட்கும் தருணம் எழுக தமிழாய் இதுவல்லோ

ஒடுங்கிவிட நாம் ஊமைகள் அல்ல
ஓடி ஒளிய நாம் கோழைகள் அல்ல
வானது முழங்க நீதிக்கான குரல்
ஐ.நா வரை ஒலிக்க வகை செய்வோமே

தமிழன் அவலத்தை தரணியெல்லாம் காட்ட
வீறு நடை போட்டு வீதியில் இறங்குவோம்
ஒரே குரலாய் ஒரே கோரிக்கையாய் - கேட்பது
ஒரு நீதி ஈழத் தமிழனுக்கான நீதி

வடக்கில் எழுக தமிழ் எல்லாத் திசைக்குமே
பிரிவினை விட்டு இணைந்திட வாரீர்
தமிழனின் கடமை இதுவென உணர்ந்து
குரல் கொடுப்போமே தமிழா வா!



# எழுக தமிழ் பேரணியானது சர்வதேசத்திற்கும், சிறீலங்கா அரசுக்கும் நிச்சயம் அழுத்தத்தை ஏற்படுத்தும்

"எழுக தமிழானது மக்கள் எழுச்சி மூலம் அனைத்துப் பிரச்சினைகளையும் உரத்துச் சொல்ல கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகும். அதனை கூட்டமைப்பு பயன்படுத்தாது விலகி நிற்பது



தேர்தல் மூலம் ஆணை வழங்கிய மக்களிற்கு செய்யும் துரோகமாகவே நோக்கவேண்டியுள்ளது"

தமிழ் மக்களின் அனைத்துப்பிரச்சினைகளுக்கும் நியாயமான நீதிகோரியே எழுக தமிழ் எழுச்சி பேரணி முன்னெடுக்கப்படுகின்றது. தமிழ் மக்களின் ஒன்றிணைந்த குரலுக்கு சர்வதேசம் தலை சாய்க்கின்றதா? இல்லையா? என்பதற்கு அப்பால் மக்களின் ஒன்றுபட்ட சக்தியானது நிச்சயம் சர்வதேசத்தின் காதுகளில் விழும். இந்த அழுத்தமானது சிறீலங்கா அரசின் மீது கடத்தப்படும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவரும், எழுக தமிழ் 2019 ஏற்பாட்டுக்குழுவின் இணைப்பாளருமான த.சிவரூபன் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அச்செவ்வியின் முழுவடிவம் வருமாறு...

**கேள்வி: நாளை நடைபெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கான ஏற்பாடுகள் எந்த கட்டத்தில் உள்ளன?**

பதில்:— ஏற்பாடுகள் ஏறத்தாழ முடிவடைந்து விட்டது. ஏற்பாட்டுக் குழுவினால் முடிந்தளவிற்கு பரப்புரைகளையும், அமைப்புக்கள் மற்றும் மக்களுடனான சந்திப்புக்களை நடாத்தி எழுக தமிழ் பேரணியின் அவசியம் குறித்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியுள்ளோம். அத்துடன் பங்குபற்றுபவர்களிற்கான போக்குவரத்து, தொலைதூரத்தில் இருந்து வருபவர்களிற்கான உணவு மற்றும் தங்குமிட ஏற்பாடுகளையும், பேரணிக்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளோம்.

**கேள்வி: எழுக தமிழ் எழுச்சிப்பேரணிக்கு ஆதரவளிக்கும் தரப்பினர் பற்றி சுருக்கமாக கூறுங்கள்?**

பதில்:— எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு வடகிழக்கினை சேர்ந்த பெரும்பாலான அனைத்து பொது அமைப்புக்கள் மற்றும் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் கட்சிகள் ஆதரவளித்துள்ளதோடு தாய் தமிழகத்தில் உள்ள அரசியல் மற்றும் சிவில் அமைப்புக்களின் ஆதரவு எழுக தமிழ் போரணிக்கு வலுச் சேர்த்துள்ளது. மேலும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் மற்றும் தமிழ் தேசியத்தின் மீது பற்றுக்கொண்ட பெரும்பாலானவர்கள் ஆதரவு நல்கியுள்ளதோடு பங்கு பற்றவும் உள்ளார்கள். அத்துடன் தமிழர் தாயகத்தின் அனைத்து தரப்பினரும் உணர்வெழிச்சியுடன் இணையவுள்ளனர்.

**கேள்வி: தமிழ் மக்கள் இன்று மிகவும் நெருக்கடியான சூழ்நிலைக்குள் வாழ்ந்துவரும் இந்த ரேத்தில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியின் அவசியம் தொடர்பில் வலுவான காரணங்களை குறிப்பிடமுடியுமா?**

பதில்:— தமிழ் மக்களின் உரிமைக்கான தேசியப் போராட்டம் ஆரம்பித்த காலங்களில் இருந்த காரணங்கள் இன்னமும் மாறாமல் இப்போதும் தொடர்கின்றது. 2009 இல் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரான கடந்த 10 ஆண்டுகளில் கூடிய வீச்சுடன் தொல்பொருட் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனபரிபாலன சபை, மகாவலி திட்டம் போன்ற வேறு வடிவங்களில் சிங்கள பௌத்த

**எழுக தமிழ்**
**ஏற்பாட்டுக்குழு இணைப்பாளர்**
**சிவரூபன்**

பேரினவாத சிறீலங்கா அரசினால் தமிழர்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்பானது சத்தமின்றி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

தமிழர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன, தமிழர் வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டு பௌத்த வழிபாட்டிடங்களாக மாற்றப்படுகின்றன. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் நீதிக்காக கண்ணீருடன் காத்திருக்கும் மக்களுக்கான பொறுப்புக்கூறல் தட்டிக் கழிக்கப்பட்டு வருகின்றது. யுத்தக்குற்றங்கள் மீதான சர்வதேச விசாரணையை கட்சி பேதங்கள் இல்லாமல் அனைத்து பௌத்த சிங்களவர்களும் எதிர்க்கின்றார்கள். அரசியல் கைதிகள் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அரச படைகளால் வலிந்து காணாமலாக் கப்பட்டவர்கள் தொடர்பில் எதுவித அக்கறையும் காட்டப்படவில்லை. தமிழர் தாயகப் பிரதேசங்களில் இராணுவக் குவிப்பும் இராணுவ மயமாக்கலும் இன்னமும் குறையவில்லை. அத்துடன் இவை எல்லாவற்றிற்கும் மேலாக இனப்பிரச்சனைக்காக நிரந்தரத்தீர்வு வழங்கப்படவில்லை. எனவே இவைகளை சர்வதேசத்திற்கும், சிறீலங்காவின் சிங்கள ஆட்சியாளர்களிற்கும் தமிழர் ஓரணியாய் ஒரேகுரலில் தெரிவிக்க வேண்டியது அவசியம். அதை மக்கள் இயக்கமான தமிழ் மக்கள் பேரவை எழுக தமிழாக செப்டம்பர் 16 இல் நடத்துகின்றது.

**கேள்வி: இந்தப் பேரணி முதலமைச்சரின் அரசியல் நோக்கத்துக்காக முன்னெடுக்க ப்படுவதாக கூறப்படும் விமர்சனத்தினை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்:— தமிழ் மக்கள் பேரவையானது பொது அமைப்புக் களையும், எமது மக்களின் உரிமைக்காக களத்திலே இறங்கிப் போராடும் கட்சிகளையும் கொண்ட ஓர் மக்கள் இயக்கம். தமிழ் மக்கள் பேரவையின் தலைமையில் நடைபெறும் எழுக தமிழில் அனைவரையும் அமைப்பு பேதமின்றி, கட்சி பேதமின்றி கலந்துகொள்ளவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட காரணங்களும், அவசியமும், எமது கோசங்களும் தமிழ் மக்களிற்கானவை. தேர்தலுக்கானவை இல்லை.

தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழினை அனைவரும் இணைந்து நடாத்தின் எங்கனம் அது தனி ஒருவரின் தனி ஒரு கட்சியின் அரசியல் நோக்கத்திற்கானது என கூறமுடியும்? எனவே இது தவறான கருத்தாகும் . எழுக தமிழ், எமது மக்களின் உரிமைக்கானது, அவர்களின் இருப்பிற்கானது. குற்றங்கள் சுமத்திக் கொண்டிருக் காமல் அனைவரும் இணைந்து எழுக தமிழினை வெல்லச் செய்வது அவசியமானது. நாம் விமர்சனங்களை கடந்து பேரணியை வெற்றிபெறச் செய்வதற்கான வேலைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

**கேள்வி: இந்தப்பேரணியில் மக்கள் ஆணைபெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பங்கேற்காது விலகி நிற்பதை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

பதில்:— தமிழ் மக்களின் ஆணையை பெற்ற கூட்டமைப்பினர், மக்கள் எதிர்நோக்கு கின்ற பிரச்சனைகளைப் புரிந்துகொண்டு அவர்களால் அரசியல் ரீதியில் தீர்வுகளை வழங்க முடியாத பெற்றுக்கொள்ள முடியாத பிரச்சினைகளை மக்கள் எழுச்சி மூலம் உரத்துச் சொல்ல கிடைத்த ஒரு சந்தர்ப்பம் தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழ். அதனை அவர்கள் பயன்படுத்தாது விலகி நிற்பது கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவர்கள் குறிப்பிட்ட வாக்குறுதிகளை நம்பி வாக்களித்த மக்களிற்கு செய்யும் துரோகமாகவே நோக்க வேண்டியுள்ளது.

**கேள்வி: அதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பங்களிப்பு எவ்வாறு இருக்கப்போகின்றது?**

பதில்:— தமிழ் மக்கள் பேரவையின் முன்னைய எழுக தமிழ் நிகழ்வுகளில் காத்திரமான பங்களிப்புக்களை வழங்கியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இம்முறை ஒதுங்கி நிற்கின்றனர். தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கின்ற அவர்கள் பேரவை தொடர்பிலான உள்ளக முரண்பாடுகளை பேரவையில் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். இது ஓர் மக்கள் எழுச்சிப் பேரணி, இது மக்களின் பிரச்சனைகளை முன்னிறுத்தி மக்களிற்காக நடாத்தப்படுகின்றது. இப்பேரணிக்கு அனை வருக்கும் அழைப்பு

தொடர்ச்சி 7ம் பக்கம்



6ம் பக்கத் தொடர்ச்சி விடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் ஆகக்குறைந்தது எழுக தமிழ் எழுச்சிப் பேரணியிலாவது அவர்கள் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு கலந்துகொள்ள வேண்டும். கலந்துகொள்வார்கள் என நம்புகின்றோம்.

**கேள்வி: காணமால் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், காணி விடுதலை, அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவற்றுக்காக பொதுமக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றபோதும் அரசாங்கம் அதனை பொருட்ப டுத்தியதாக காணமுடியாத சூழலில் எழுக தமிழ் எத்தகைய அழுத்தங்களை உள்நாட்டில் ஏற்படுத்தும் என்று கருதுகின்றீர்கள்?**

பதில்:— தனியே மேற்குறித்த பிரச்சனைகளிற்கு உரியவர்கள் மட்டும் அதனைக் கோரவில்லை மாறாக எழுக தமிழ் மூலம் அனைத்துத் தமிழ் மக்களும் அவற்றிற்கு நியாயம் கேட்கின்றார்கள் என்பது நிச்சயம். அவர்களிற்கு சர்வதேச ரீதியிலும், உள்ளக ரீதியிலும் அழுத்தங்களை உள்ளாக்கும். அதற்காக அரசாங்கம் உடனடியாக தீர்வினைத் தந்துவிடாது. எனினும் ஐ.நா கூட்டத்தொடர் நடைபெறுகின்ற இக்காலப் பகுதியில் இம்மக்கள் எழுச்சிப்பேரணி அவர்களிற்கு அழுத்தத்தினை வழங்கும். அத்துடன் வருகின்ற தேர்தல்களில் இவை தமிழர்களின் வாக்குகளில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தும்.

**கேள்வி:எழுக தமிழ் மூலம் சர்வதேசத்திற்கு கூறவிளையும் செய்தி என்ன? இதற்கு சர்வதேசம் தலைசாய்க்கும் என்ற நம்பிக்கை உள்ளதா?**

பதில்:— சர்வதேசத்திற்கு தமிழர்கள் ஒரணியாக, ஓர் குரலாக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளிற்கு குரல் கொடுக்கின்றோம். என்பதையும், தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்தரித்து அதை முடிவுக்குக் கொண்டு வருவதில் சர்வதேசம் பெரும் பங்காற்றியிருந்தது. எனவே அவர்களிற்கும், இன்னமும் எங்களது மேற்படிப் பிரச்சனைகளுக்கான தீர்வும், பிரதான தேசியப் பிரச்சனைக்குத் தீர்வும் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரான 10ஆண்டுகள் கடந்தும் வழங்கப்படாது இருப்பதற்கு சர்வதேசமும் பொறுப்பு என்று கூறுவதும் செய்தியாகும். சர்வதேசம் தலை சாய்க்கின்றதா இல்லையா என்பதற்கு அப்பால் நிச்சயம் அழுத்தம் ஏற்படும். அவ்வழுத்தம் சிறீலங்கா அரசின் மீது கடத்தப்படும். அத்துடன் இவை சர்வதேசத்தால் குறித்து வைக்கப்படும். தமது நலன்களின் அடிப்படையில் ஏதோவொரு காலத்தில் அவை பயன்படுத்தப்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

**அரசியல் தரப்புக்களின் மக்கள் அதிருப்தி கொண்டுள்ள நிலையில் வெகுஜன போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியதொரு சூழல் தற்போது தாயகத்தில் உருவாகியுள்ள நிலையில் இதில் சிவில், புலம்பெயர் அமைப்புக்களின் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்று கருதுகின்றீர்கள்?**

பதில்:— மக்கள் அமைப்புக்களும், பொது அமைப்புக்களும் தாயகத்திலும், அதற்கு வெளியிலும் ஒரணியாக இணைந்து செயற்படுவதும் அதுவும் தமிழ் மக்கள் பேரவை போன்ற மக்கள் இயக்கம் ஒன்றைக் பலமாகக் கட்டியெழுப்ப வேண்டியதும் அவசியமானது ஆகும். அப்பொழுதான், தேர்தல் அரசியலில் ஈடுபடும் அரசியற் கட்சிகள் அவர்கள் முன்வைக்கும் தேர்தல் வாக்குறுதிகள் மீதான பொறுப்புக் கூறலிற்கு வழிவகுக்கும். அத்துடன் மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளிற்கான தீர்வுகளையும், மக்களின் விருப்பங்களினையும் வெளிக்கொணர முடியும். தமிழர் தேசத்தின் தேசிய அரசியல், பொருளாதார, புலமைசார் சிந்தனை மையம் உருவாக வழிவகுக்கும்.

**கேள்வி: எழுக தமிழின் அடுத்த கட்டம் என்னவாக இருக்கும்?**

பதில்:— எழுக தமிழின் பின்னர், மக்கள் இயக்கமான தமிழ் மக்கள் பேரவை தமிழர் தாயகம் தழுவிய ரீதியில் பல்வேறுபட்ட பொது அமைப்புக்கள், மக்கள் அமைப்புக்கள், தொழில் சார் சங்கங்கள் என்பவற்றையும் கட்சிகளையும் கொண்ட ஒரு பலமான மக்கள் இயக்கமாக மாற்றியக்கப்படும். அதனடிப்படையில் தமிழ் தேசிய சிந்தனை மையமாக செயற்பட முயற்சிக்கும். அதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்.

# வெல்லட்டும் ‘எழுக தமிழ்’ எழுச்சிப் பேரணி

**விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன்**

தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் செப்டம்பர் 16ஆம் தேதி தமிழீழம் உட்பட உலகம் முழுவதும் நடைபெற விருக்கும் ‘எழுக தமிழ்’எழுச்சிப் பேரணியின் கோரிக்கைகள் வெற்றிப் பெற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.‘ தமிழர்களின் பூர்வீக நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆக்கிரமிப்பு, மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படவேண்டும். சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்; வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான நம்பத்தகு விசாரணைகள் நடைபெறவேண்டும்.



வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவ மயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும். இடம் பெயர்ந்த— புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் அனைவரையும் அவரவருக்குரிய பாரம்பரிய காணிகளில் மீள்குடியமர்த்த வேண்டும்’ என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இப்பேரணி நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இந்த எழுச்சிப்பேரணியில் பங்கேற்க வேண்டுமென தமிழ்ச்சொந்தங்கள் யாவருக்கும் அழைப்பு விடுத்துள்ள தமிழ் மக்கள் பேரவையின் தலைவரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களின் இம்முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

போர்க்குற்றம் மற்றும் இனக் கொலை தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் பன்னாட்டுப் பொறிமுறை விசாரணை நடத்த வேண்டும் என்னும் கோரிக்கையை வலியுறத்தி ஏற்கனவே விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தமிழகம் முழுவதும் மாபெரும் கையெழுத்து இயக்கம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளோம் என்பதைத் தமிழ்ச்சமூகம் நன்கு அறியும். தற்போது அதே கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் இந்த எழுச்சிப்பேரணி வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துவதோடு, அதே நாளில் தமிழகத்தில் நடைபெறும் எழுகதமிழ் எழுச்சிப் பேரணியில் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியும் பங்கேற்கிறது என அறிவிக்க கடமைப்பட்டு இருக்கிறோம்.

ஐ.நா பேரவை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறத்தக்க வகையில் ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகமும் ஒற்றுமையாகத் திரண்டெழ வேண்டுமென விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

# உலகம் வியக்க விடியல் திறக்கும் எழுக தமிழ்ப் பேரணி

• கவிபாஸ்கர்



உலகமொழிகட்கெல்லாம்
மூத்தமொழி தமிழை
மூச்சுக்காற்றாய் சுவாசிக்கும்
மூத்தத் தமிழினத்தின் கூட்டணி - எம்
எழுக தமிழ் பேரணி..!

கொத்துக்கொத்தாய் கொன்றொழித்த
கொடுங்கோண்மை ஆட்சியரின்
கொடுமைதனை எடுத்துரைக்க
கூடும் தமிழர் பேரணி - எம்
எழுக தமிழ் பேரணி..!

இன உரிமை முழக்கத்தோடு
புவி அதிரும் ஓசையோடு
தூங்கும் தமிழரை தட்டியெழுப்ப - பார்
பொங்கு தமிழாய் வருகிறது! எம்
எழுக தமிழ் பேரணி..!

வாடிகிடக்கும் வாழ்வுதனை
மூடிகிடக்கும் கிழக்குதனை
தமிழைக் கொண்டு திறப்பதற்கு - பார்
வீதியெங்கும் எழுகிறது! எம்
எழுக தமிழ் பேரணி..!

கரம் உயர்த்தி வானம் தொட்டு
அறவழியில் நீதிகேட்டு
மறத்தமிழர் கூட்டம் கூட்டி - பார்
மண்காக்க வருகிறது! எம்
எழுக தமிழ் பேரணி..!

வீழ்ந்ததாய் நினைத்த
வீணர்களுக்கு விடைதந்து
வீழாது நிமிரும்
வீரத்தமிழர் பேரணி! - எம்
எழுக தமிழ் பேரணி..!

முள்ளிவாய்க்காலோடு
முடிந்ததென கொக்கரித்த
மூடர்களை முட்டித்தள்ள
முளைத்து எழும் ஓரணி - எம்
எழுக தமிழ் பேரணி..!

மண்காத்தோர் கனவுதனை
விண் முட்ட முரசறைத்து
விடியலுக்கு நீர்வார்க்கும்
மக்கள் திரள் ஊரணி - எம்
எழுக தமிழ் பேரணி..!

உயிர் தந்த தமிழ் ஏந்தி
எம் தமிழீழ உணர்வேந்தி
இலட்சியத்தின் சுடர் எடுத்து
இனஉரிமை குரல் தொடுத்து
இலக்கு நோக்கி எழுகிறது..! எம்
எழுக தமிழ் பேரணி..!

மக்கள் சக்தி எழுச்சியோடு
மண்ணை காக்கும் புரட்சியோடு
உலகம் பார்த்து வியந்து நிற்க!
விடியல் கதவை திறந்து வைக்க
எழுந்து நிமிர்ந்து வருகிறது..! எம்
எழுக தமிழ் பேரணி!

# எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் அனைத்துத் தமிழ் உறவுகளும் பங்கேற்க வேண்டும்

## பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள் அழைப்பு

### எழக தமிழ் எழுச்சி காத்திரமான செய்தியை வழங்கும்

**யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்**

தமிழ்த்தேசிய பரப்பில் மக்கள் எழுச்சிப்போராட்டங்கள் வலுப்பெற வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமானது தமிழ்த் தேசிய உரிமைப்போரட்டத்திற்கு தன்னாலான பங்களிப்பை என்றும் வழங்கி வந்துள்ளது. ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான மக்கள் எழுச்சி போராட்டமாகிய எழுக தமிழிற்கும் காலத்தின் தேவை உணர்ந்து நாம் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்குகின்றோம். வரலாற்றில் இருந்து பாடங்கற்றுக்கொள்ள தமிழ் மக்கள் தவறியதன் விளைவாகவே இன்று வரையில் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு கொண்டிருக்கின்றோம். தமிழ் மக்களின் பூர்வீக தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வகையிலான திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்களினையும், திட்டமிட்ட வகையிலான விகாரைகள் அமைக்கப்படுவதனையும் தடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் நாம் இருக்கின்றோம் என்பதனை அறிந்து கொள்ளாதவர்களாய் எமக்குள் நாம் கட்சிகளாக பிரிந்து நின்று அடிபடுவது ஆரோக்கியமானதா?

தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளினை வென்றெடுக்கும் வரையிலாவது குறைந்தபட்சம் தமிழ் மக்களினை ஓரணியாக ஒன்றுதிரட்டி ஓர் குடையின் கீழ் வைத்திருக்க இன்றைய காலச் சூழலில் அரசியல் கட்சிகளினால் முடியாதுள்ளது. மாறாக அத்தகைய கடமையினை ஓர் மக்கள் இயக்கம் ஒன்றின் மூலமாகவே சாத்தியப்படுத்த முடியும். இத்தகையதொரு சூழலில் தான் மக்கள் இயக்கம் ஒன்றினை பலப்படுத்த வேண்டிய இக்கட்டான ஓர் காலகட்டத்தில் இன்று தமிழ் சமூகம் உள்ளது என்பதை மறுதலிக்க முடியாது.

நாம் எமது அரசியல் உரிமைகளினை வென்றெடுப்பதற்கு அரசியல் ரீதியாக ஈழத்தமிழர்களாகிய நாம் எம்மை பலப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. இன்று எமது பிரதிநிதித்துவ பலத்தை சிதறடிக்கின்ற வகையில் தமிழ்தேசிய பரப்பில் மூன்று தரப்புக்களாக பிளவுபட்டு நிற்கின்றோம். உண்மையாக தேசியத்தை நேசிப்பவர்களாக இருந்தால் மூன்று தரப்புக்களாய் பிளவுபட்டு நிற்கும் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட முடியும். இங்கு தமிழ் தேசியத்தின் நலனை விட கட்சிகளின் நலன்களே முதன்மை பெறுவதனாலேயே இத்தகைய பிளவுகள் ஏற்படுகின்றன. இன்றைய சூழலில் தேசியத்தை நேசிக்கும் தரப்புகள் ஒற்றுமைப்பட வேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

தொடர்ச்சி 13ம் பக்கம்

### தமிழர்களின் நீதிக்கான குரலாக எழுக தமிழ் எழுச்சி பேரணி உள்ளது

**கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம் அறிக்கை**

இன்றைய அரசியல் சூழலில் தமிழ் மக்களின் எழுச்சிப் போராட்டங்கள் முதன்மையடைய வேண்டியது காலத்தின் தேவையாகும். கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியமானது தமிழ் தேசிய நீதிப் போராட்டங்களிற்கு தன்னாலான பங்களிப்பை என்றுமே வழங்கி வருகின்றது. ஈழத் தமிழர்களின் மிகப் பெரும் நீதிக்கான குரலான எழுக தமிழிற்கு காலத்தின் தேவை உணர்ந்து நாம் பரிபூரண ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்குகின்றோம். யுத்தத்திற்கு முன்னரும், தற்போதும் இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராக அரங்கேற்றுகின்ற துரோகங்களுக்கு ஈழத்தமிழர்கள் நாம் ஒன்றாய் குரல் கொடுக்காமையே இன்றைய எமது இந்நிலைக்குக் காரணமாகும். தமிழ்த் தேசியத்தில் பல கட்சிகளாய் பிளவுபட்டு நிற்கையில் நாம் நீதியினை வென்றெடுப்பது எட்டாக் கனியாகத்தான் இருக்கின்றது. தமிழர்களாகிய எங்களுக்குள் இருக்கும் நீண்ட இடைவெளிகளை தகர்த்தெறிவதாக எழுக தமிழ் நிகழ்வில் தமிழர்கள் நாம் அனைவரும் ஒரே தமிழ்த்தாய் பிள்ளைகளாய் ஒன்றிணைவோம். மூலை முடுக்குகளில் வாழும் தமிழர் மனங்களில் உறங்கிக் கிடக்கும் நீதிக்கான உணர்வுகளுக்காக, தட்டிக் கேட்கும் தன்மைக்காக அனைத்து தமிழர்களும் குரல் கொடுக்கும் அறவழிப் போராட்டமாய் எழுக தமிழ் பரிணமிக்க காத்திருக்கிறது.

இலங்கை அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளில் எம் தமிழ் தலைமைகள் விலை போவது வேதனையளிக்கிறது. மாற்றத்தினை வேண்டி நிற்கும் எழுக தமிழில் நாம் கேட்பது தமிழர்களுக்கான நீதியைத்தான். வட கிழக்கில் திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்புக்கள், தமிழ்களின் இன்றைய மற்றும் எதிர்கால இருப்பினைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, போர் குற்ற விசாரணை, அரசியல் கைதிகளின் விடுதலை என பல விடயங்களில் இன்றும் இலங்கை அரசாங்கம் நீதியைத் தர மறுக்கின்றது. மாணவர் நாம் மிகப் பெரும் சக்தியாய் எழுக தமிழில் பங்கேற்க கடமைப்பட்டுள்ளோம். பேரணியின் சாதகமான பெறுபேறு, தமிழனின் விடியலுக்கானது. எமக்கு இழைக்கப்பட்ட துரோகங்களை மீண்டும் ஒரு முறை சர்வதேசத்திற்கு கூறிட இதுவே தகுந்த தருணமாகும். எனவே தமிழர்களின் உரிமைகளினை வென்றெடுக்க கரம் சேர்க்கக் காத்திருக்கும் அனைத்து தமிழ் உறவுகளையும் புரட்டாதி 16 அன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்றலில் இருந்து ஆரம்பமாகும் எழுக தமிழ் பேரணியில் ஒன்றாய் அணிதிரழ உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

### உரிமையினை போதிக்காத பல்கலைக்கழகமும் போராடாத இனமும் வரலாற்றில் என்றும் பிழைகளே!!

**அனைத்து தமிழ்நாடு மாணவர் சங்கம் - சென்னை பல்கலைக்கழகம் அறிக்கை**

தொடர்ச்சியான அடக்குமுறையாலும், கட்டற்ற அரசியல் ஒடுக்குமுறையாலும் உரிமையை இழந்த இனம், எழுச்சிமிகு மக்கள் போராட்டத்தால் மட்டுமே தனது உரிமையை நிலைநாட்ட முடியும். என்பதை நாம் உணர வேண்டிய நேரமிது. 1948 க்கு பிந்தைய சுதந்திர இலங்கையில் ஈழத் தமிழருக்கான சுயநிர்ணய உரிமை போராட்டம் என்பது பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு இடையிலும் மக்களின் எழுச்சியால் இன்றளவும் தொடர்ந்து வருகிறது. ஈழத் தமிழ் மக்கள் தங்களின் உரிமைகளை நிலைநாட்ட பல்வேறு வழிகளில் போராடி வருகின்றனர். யுத்த காலத்தில் பல இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதும், யுத்தத்திற்குப் பின்பு ஆயிரக்கணக்கான ஈழத் தமிழ் உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நிகழ்வுகளும் இவ்வுலகில் ஈழத்தமிழினம் உயிர்ப்புடன் உள்ளதா? எனும் நெஞ்சை உலுக்கும் கேள்வியாக 2009ல் எழும்பியது. அதன் தொடர்ச்சியாக இன்றளவும் ஈழத்தமிழரின் பூர்வீக நிலங்களில் சிங்கள—பௌத்த குடியேற்றம் மற்றும் திட்டமிட்ட ராணுவ மயமாக்கல் என்பது வரலாற்றில் ஈழத்தமிழனின் நிலம் என்று ஒன்று இருந்தது என்பதை அழிக்க சிங்கள—பௌத்த பேரினவாத அரசு முன்னெடுக்கும் ஒரு கொடிய நிகழ்வாகவே நாங்கள் பார்க்கிறோம்.

யுத்தம் முடிந்து இன்றளவும் முறையான விசாரணை என்பது இல்லவே இல்லை. மேலும் “திருடன் கையில் சாவி” என்பதை போன்று போர்க்குற்றம் செய்த சிங்கள அரசிடமே விசாரணை அமைப்பு என்றால் “நீதி என்பது அநீதி”ஆகவே ஈழத்தில் இருக்கும். எம்தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற யுத்தகால போர்க்குற்ற நடவடிக்கைகளை விசாரிக்க சர்வதேச விசாரணை என்பதும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலையை வெளிக் கொணர்வதும், ஏறத்தாழ பல பத்து ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் கைதிகளாக உள்ள ஈழத்தமிழர்களின் விடுதலையும் இன்றியமையாதது ஆகும். உரிமையினை போதிக்காத பல்கலைக் கழகமும்! போராடாத இனமும் வரலாற்றில் என்றும் பிழைகளே!!

எம் தாய் தமிழ் ஈழ மக்களின் மீதும் ஈழத்தமிழ் நிலப்பரப்பின் மீதும், நடத்தப்படும் சிங்கள பௌத்த இனவெறி அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து தமிழ் மக்கள் பேரவை சார்பாக வரும் செப்டம்பர் திங்கள் 16ஆம் நாள் முன்னெடுக்கப்படும் எழுக தமிழ் பேரணிக்கு தமிழ்நாட்டின் தாய் பல்கலைக்கழகமான சென்னை பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அனைத்து தமிழ்நாடு மாணவர் சங்கம் சார்பாக ஆதரவுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த வரலாற்று சிறப்புமிக்க எழுக தமிழ் பேரணியில் தாயகத்திலுள்ள ஈழத் தமிழ் உறவுகள் பெருந்திரளாக கலந்து கொண்டு நம் தம் தாய் தமிழ் நிலத்தின் உரிமையை மீட்டெடுக்க சென்னை பல்கலைக்கழக மாணவர்கள் சார்பாக வேண்டுகிறோம்

**தமிழ்மக்கள் ஒன்றாகட்டும் !**
**எழுக தமிழ் பேரணியின்**
**உன்னத கோரிக்கைகள் வென்றாகட்டும்!!**

# புதிய சிந்தனையை உருவாக்கவும், விடுதலைக்கு வழிதேடவும், புதுவாழ்வு காணவும் எழுக தமிழா

மு.திருநாவுக்கரசு

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையானது தமிழ் தேசியப் போராட்டத்தின் முடிவல்ல; அது தமிழ்த்தேசியப் போராட்டத்திற்கான புதிய மடைதிறப்பு.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நிகழ்வதற்கு 90 ஆண்டுகளுக்கு முன்பு, 1919ஆம் ஆண்டு 10 நிமிட நேரம் நிகழ்ந்த சரமாரியான துப்பாக்கிச் சூட்டின் மூலம் 1500 பொதுமக்களை பலிகொண்ட ஜாலியன்வாலா பாக் படுகொலை எப்படி இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு புதிய மடை திறப்பாக அமைந்ததோ அப்படி, அதையும்விடப் பாரிய அளவில் திட்டமிடப்பட்ட வகையில் சுமாராக ஒன்றரை லட்சம் தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளான முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு பாரிய மடை திறப்பாக அமைந்துள்ளது.

இவ்வாறு ஏற்பட்ட புதிய மடை திறப்பை அடிப்படையாகக் கொண்டு தமிழீழப் போராட்டத்தை புதிய உத்வேகத்துடன், புதிய சூழலுக்கேற்ப ஒரு புதிய பாதையில் முன்னெடுக்கவல்ல ஆற்றலையும், செயற்திறனையும் தமிழ் தலைவர்கள் காட்ட தவறினர். அத்துடன் அவர்கள் தமிழ் மக்களை விட்டுவிலகி ஓடுகாலிகளாய் சிங்கள இனவாத ஆட்சியாளர்களை நோக்கி ஓடினர். இவர்களின் இத்தகைய பிறழ்விலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றிப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய வரலாற்றுத் தேவை எழுந்தது.

இதனால் திசை மாறிப்போன தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அதன் கூட்டாளிகள் படிப்படியாக வெளியேறி இறுதியில் தமிழ் மக்கள் பேரவை என்ற ஒரு பொதுமக்கள் அமைப்பை உருவாக்கினர். வடமாகாணசபை முதல்வராக இருந்த திரு.விக்னேஸ்வரனை முன்னிலைப்படுத்தி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர் திரு.சுரேஷ் பிரேமச்சந்திரன் என்போர் இணைந்து திரு.விக்னேஸ்வரனை இணைத் தலைவராக கொண்டு தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கினர்.

இத்தமிழ் மக்கள் பேரவை "எழுக தமிழ்" பேரணிகளை நடத்தத் தொடங்கியது. தமிழ் மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கை பிறந்தது.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு புதிய நம்பிக்கை ஊட்ட தொடங்கிய தமிழ் மக்கள் பேரவைக்குள் ஏற்பட்டிருக்கும் உடைவுகள், முறிவுத்தறிவுகள் தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் மேலும் கவலை அளிக்கவல்ல கசப்பான பக்கங்களை தோற்றுவித்துள்ளன.

மேற்படி மூன்று தலைவர்களும் எப்பாடுபட்டேனும் தங்களுக்கு இடையேயான முறிவுத்தறிவுகளை கடந்து ஒன்றுபட்ட வகையில் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று வரலாறு இவர்களுக்கு ஆணையிடுகிறது.

தமிழ் மக்களின் விடிவுக்காக ஒன்று பட்டு போராடுவதற்கான பரந்த மனப் பாங்கையும், ஆளுமையையும், ஆற்றலையும் வெளிக்காட்டாது தங்களுக்கிடையே அரசியல் ஆதிக்கப் போட்டிகளுக்குள்ளும் தங்களுக்கு இடையேயான குத்து வெட்டுகளுக்குள்ளும் தமிழ் மக்களின் போராட்டத்தை சிக்கவைத்துச் சீரழிப்பார்களேயானால் தமிழ் மக்களை ஏமாற்றிய குற்றத்திற்கும், பாவத்துக்கும், பழிக்கும் இவர்கள் அனைவரும் உள்ளாக நேரும்.

"எழுக தமிழ்" என்பது ஒரு விபத்தல்ல; அது வரலாற்று தேவையும் வரலாற்றின் கட்டளையும் ஆகும்.

தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்று தமிழ் மக்களின் உரிமைக்காக போராடப் புறப்பட்ட தமிழ் தலைவர்கள் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அழித்தொழிக்கும் சிங்கள ஆட்சியாளர்களை நோக்கியோடப் புறப்பட்ட பின்னணியில் எழுந்த "எழுக தமிழ்" என்பது ஒரு விபத்து அல்ல என்பதையும், அதற்கு இருக்கக்கூடிய ஆழ, அகலத்தையும், வரலாற்று உள்ளடக்கத்தையும் சரிவரப் புரிந்தாக வேண்டும்.

இரத்தம் தோய்ந்த வகையிலான இனப்படுகொலை முள்ளிவாய்க்காலில் உச்சக்கட்டத்தை அடைந்து முடிந்த போது தமிழினம் அதற்கு ஈடுகொடுத்துத் தன்னை தகவமைத்துக்கொள்ள வேண்டியதற்கான ஒரு புதிய கட்டத்திற்கு தள்ளப்பட்டது. அந்தப் புதிய கட்டத்திற்கு தன்னை தகுதியாக்கி, அதிலிருந்து பெரிதும் முன்னேறுவதற்கான ஓர் அழைப்பாய் "எழுக தமிழ்" என்பது எழ




வேண்டி இருந்தது. கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாய் ஏற்படும் தொடர் தோல்விகளில் இருந்தும் நமது கடந்தகால வரலாற்றில் ஏற்பட்டிருக்கக் கூடிய நல்லவை—கெட்டவை, எழுச்சி— வீழ்ச்சி, மகிழ்ச்சி—துக்கம் என்பனவற்றில் இருந்தும் படிப்பினைகளை பெற்றும், அத்துடன் கூடவே உலகை அறிந்தும், உன்னை உணர்ந்தும் புதுப்பொலிவுடன் எழுக தமிழா என்பதே இந்த "எழுக தமிழின்" வரலாற்று உள்ளடக்கமாகும்.

இதற்கு ஆழ்ந்த கோட்பாட்டு பார்வையும், கூரிய வரலாற்று நோக்கும் அவசியமாகும். அரசியலை கோட்பாட்டு ரீதியாகவும், கோட்பாட்டை நடைமுறையுடன் இணைத்து அதனை வரலாற்று ரீதியாகவும் பார்ப்பதற்கான பார்வை ஈழத் தமிழரின் அரசியல் முன்னெடுப்பில் மிகவும் அரிதானது. இன்றைய இந்த தலைமுறையும், இன்றைய தலைவர்களும், இன்றைய அறிஞர்களும் அத்தகைய தவறை இனி ஒருபோதும் இழைக்கக் கூடாது.

தமிழா! உன்னை நீ அறிவாயாக. நீ உனது தொன்மையான வரலாற்று வளர்ச்சிக் கூடாக அதன் வழியில், உருத்திரண்ட செழுமை மிக்க பண்பாட்டின் சொந்தக்காரன். பூமியைக் கடந்து அண்ட கோளங்களை தழுவி சிந்திக்கும் ஆற்றலையும் கூடவே செயல் திறன்களையும் கொண்ட வரலாறு உனக்கு உண்டு. பல நூற்றாண்டு கால அடிமைத்தன வாழ்வினால் உனது திறன் மற்றும் ஆற்றல்கள் என்பனவெல்லாம் முனை மழுங்கி மங்கிப் போய்விட்டன. பல நூற்றாண்டு காலமாய் அரசற்ற நிலையில் உள்ளார்ந்த அறிவியல்— விஞ் ஞான, பண்பாட்டு ஆக்கத் திறன்களையும் மற்றும் கலை, இலக்கியம், விளையாட்டு போன்றவற்றை உலகத்தரத்தில் வளர்க்க வழியின்றி வெறுமனே உடல் உழைப்பையும் மூளை உழைப்பையும் விற்று வாழும் ஒருவகை நடைப்பிணங்களாக ஊடாடும் துயரம் உண்டு.

பல நூற்றாண்டுகால அந்நிய ஆதிக்கத்தின் கீழ் அடிமைத்தனத்தை சிந்தனை முறையாகவும், எஜமானிய விசுவாசத்தை வாழ்க்கை முறையாகவும் கொண்ட அறிஞர்களும், தலைவர்களும் தோன்றும் வாழ்நிலை ஏற்பட்டது. இப்பின்னணியில் மக்கள் மத்தியில் பல் வகையான ஆக்கத்திறன் வளர்ச்சிகளை முன்னெடுத்து அவற்றை வளர்ப்பாரின்றி மழுங்கடிக்கப்பட்டும், மூடுண்டும் போயின. தமிழ் மக்களின் கடந்த ஒரு நூற்றாண்டு கால அரசியற் தோல்விகளுக்கும் அழிவுகளுக்குமான வேரையும் விழுதையும் இப்பின்னணியில் இருந்தே அடையாளம் காணவேண்டும்.

இவற்றையெல்லாம் அடையாளங் கண்டு மீட்சியடைய எழுக தமிழா. எதிரியின் அரசியல் ஆதிக்க இரும்புப் பிடிக்குள் அகப்பட்டு இனரீதியாக நசுக்கப்பட்டும் நிலை இருக்கும் வரை எமது பிள்ளைகளின் மேம்பட்ட அறிவியல், விஞ் ஞான, கலை, இலக்கிய மற்றும் விளையாட்டுப் படைப்பாற்றல்கள் வளர்ச்சியடைய முடியாது.

யூதர்கள் ஒரு சிறிய இனம். உலக சனத்தொகையில் அவர்கள் ஒரு கோடியே 50லட்சம். அதில் இஸ்ரேலில் மட்டும் 65இலட்சம் யூதர்கள் தமக்கான அரசமைத்து வாழ்கிறார்கள். உலகின் தலைசிறந்த விஞ் ஞானிகளையும், சிந்தனையாளர்களையும், தொழில்நுட்பவியலாளர்களையும் மற்றும் பலதுறைகளில் முன்னோடிகளையும் இந்த இனம் படைத்து உலக நாகரிகத்திற்கு பெரும் பங்களிப்பு செய்துள்ளது. அவர்களது புவியியல், அரசியல் வரலாற்று நிர்ப்பந்தங்கள் அவர்களை ஒருபுறம் சிந்திக்க உந்தவும் மறுபுறம் அவர்களது பண்பாட்டுப் பாரம்பரிய பொக்கிஷத்தில் படிந்திருக்கும் அறிவியல் — விஞ்ஞான ஆக்கத்திறன் என்பனவற்றின் வாயிலாக படைப்பாற்றல் சக்தியை அவர்களால் மேலும் முன்னெடுக்கவும் வழிற்யேற்படுத்துகிறது.

1940 களின் மத்தியை அண்டிய காலத்தில் சுமாராக 60லட்சம் யூதர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட நிலையில், புதிய சூழலுக்கேற்ப புதிய சிந்தனையுடன் யூத தேசியவாதத்தை புதுப்பொலிவுடன் கட்டமைப்பு செய்து

தொடர்ச்சி 10ம் பக்கம்

# எழுக தமிழ் பேரணியில் பங்கேற்கவேண்டியது ஒவ்வொரு ஈழத்தமிழர்களினதும் வரலாற்று கடமையாகும்

**தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் அறிக்கை**

முள்ளிவாய்க்காலில் பேரழிவைச் சந்தித்தும் மனம் தளராமல் நீதிக்கான நெடும்பயணத்தில் நடைபோடும் ஈழத் தமிழ் சொந்தங்களுக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் முன்னெடுக்கப்படும் எழுக தமிழ் பேரணியில் பங்கேற்கவேண்டியது ஒவ்வொரு ஈழத்தமிழர்களினதும் வரலாற்று கடமையாகும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கையில்...

ஈழத் தமிழர்களை அழிக்க நினைக்கும் சிங்களப் பௌத்த பேரினவாதிகள் அஞ்சி நடுங்கும்படி 'என்றும் வணங்கா மண்' இதுவென உலகுக்கு அறிவிக்க தமிழ் மக்கள் பேரவை ஒழுங்கு செய்யும் எழுக தமிழ் பேரணியை தமிழ் மக்கள் வெற்றிப்பெற செய்ய வேண்டும். ஈழத் தமிழர்களின் விடுதலைக் கனவைப் போற்றியபடி தோள்கொடுத்து நிற்கும் தொப்புள் கொடி உறவுகளாய் தமிழ்நாடு உங்களோடு உணர்வுப் பூர்வமாக நிற்கிறது என்பதை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாயக கனவினில் சாவினைத் தழுவிய ஆயிரமாயிரம் இளம் காளைகளின் தமிழீழக் கனவைத் தகர்ப்பதற்கு ஆட்லெறிகள் எதுவும் இதுவரை பூமியில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை உலகுக்கு உணர்த்தும்படி எழுக தமிழர்களே!

விடுதலைப் பயிர் வளர்க்க தம் உயிரை விதைத்து மாவீரர்களாய் வரலாற்றில் நிலைப்பெற்றோர் தம் ஈகங்களும், விடுதலைப் போரில் அப்பாவிப் பொதுமக்கள் ஆயிரமாயிரம் உயிரை விட்டதும் வீண் போகவிடாமல் தடுக்க வீறுகொண்டு எழுக தமிழர்களே!

கொத்துக் குண்டுகளாலும், ஆட்லெறிகளாலும் உணவு, மருந்து பொருட்களைக் தடுத்ததாலும் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று வகைதொகையின்றி ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தவர்களை நீதியின் முன் நிறுத்தாமல் ஓயமாட்டோம் என உலகிற்கு சொல்வதற்கு எழுக தமிழர்களே!

வெற்றிப் பெற்று விட்டோம்' என்ற இறுமாப்பில் தமிழ் மண்ணெங்கும் பௌத்த விகாரைகளை நிறுவியும், 'வளர்ச்சித் திட்டங்கள்' என்ற பெயரால் தமிழ் மண்ணை ஆக்கிரமித்தும் சிங்களப் பௌத்தமயமாக்கும் பேரினவாதிகளின் கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்கு எதிராய் 'உடல்கள் வேறு உணர்வுகள் ஒன்று' என்று எழுக தமிழர்களே!

ஆண்டுகள் பத்து உருண்டோடிவிட்டதால் 'சோர்ந்து விடுவோம்' என்றெண்ணி வெற்றிக்



கூக்குரல் இடுவோரின் கொட்டம் அடக்க ஆழிப் பேரலைப் போல் எழுக தமிழர்களே! "தாமே முன்மொழிந்து கொண்டு வந்த தீர்மானத்தை நடைமுறைபடுத்தாமல் இரண்டாண்டு, இரண்டாண்டு என்று காலம் கடத்தி அத்தீர்மானத்தைக் காலில் போட்டு மிதிக்கும் இனப்படுகொலையாளர்களை உலகத்தின் முன்பு பொறுப்புக்கூற வைக்காமல் நாங்கள் ஓயப்போவதில்லை" என்பதை சர்வதேச சமூகம் அறிந்து கொள்வதற்கு எழுக தமிழினமே!

போர்க் குற்றச்சாட்டு காரணமாக ஐ.நா அமைதிக் காப்பு படையில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட சர்வேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக்கி உலகின் கண்களில் மண்ணைத் தூவி இனப்படுகொலைக்குப் பரிசளித்து மகிழும் சிங்கள ஆட்சியாளர்களின் குலைநடுங்க கொப்பளிக்கும் கோபத்தோடு எழுக தமிழர்களே!

மக்களிடம் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் அடியெடுத்து வைத்துவிட்டு எதிரிகளின் பகடைக் காயாக மாறிப் போன தமிழ்த் தலைவர்களுக்கு இறுதி எச்சரிக்கை ஒலி எழுப்ப எழுக தமிழர்களே! உள்நாட்டு விசாரணையென்று உலகை ஏய்த்துவரும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு உற்றத் துணையாய் நின்று தமிழர்களின் கண்ணில் குத்தும் காரியத்தை செய்வோரின் துரோகப் படலத்திற்கு முடிவுகட்ட எழுக தமிழர்களே!

நம்மை கிள்ளிக் கீரையாய் மதித்து இயன்றவரை வளைக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் பிராந்திய வல்லரசுகளும், உலக வல்லரசுகளும் தமிழர்களின் போராட்ட உறுதியை அறிந்தேற்கும்படி அணிஅணியாய் திரள்க தமிழர்களே!

சிதறிக் கிடக்கும் தமிழ்த் தலைவர்களை ஓரணியில் நிறுத்தும் வரலாற்று சக்தியாய் தமிழ் மக்கள் பேரவையின் 'எழுக தமிழ்' பேரணி அமையட்டும்! மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கையோடு எதிரியிடம் கையளிக்கப்பட்டதால் ஆயிரமாயிரமாய் காணாமலடிக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி எழுக தமிழர்களே!

முன்பொருமுறை இதே செப்டம்பர் மாதத்தில் இந்திய அமைதிப் படைக்கு எதிராய் ஈழத் தமிழர்களை எழுச்சிக் கொள்ளச் செய்ய இந்தியாவின் ஆக்கிரமிப்புப் பசிக்கு தன்னுயிரை இரையாக்கி வீரச்சாவடைந்த ஈகச்சுடர் திலீபனின் நினைவுகள் வழிநடத்த ஆக்கிரமிப்பாளர்களின் வேட்கையைத் தீக்கிரையாக்கும் எரிமலை என எழுக தமிழர்களே!

எத்தனை எத்தனை ஈகங்கள், எத்தனை எத்தனை வலிகள், எத்தனை எத்தனை இழப்புகள் எத்தனை எத்தனை இடப்பெயர்வுகள், எத்தனை எத்தனை துரோகங்கள் இத்தனைக்கும் விடைகாணாமல் வீறுகொண்டெழுந்த இனம் பின் வாங்காது எனச் அறிவிக்க எழுக தமிழர்களே!

தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் எனப் பிரகடனப்படுத்த எழுக தமிழர்களே!

---

9ம் பக்கத் தொடர்ச்சி அதன்மூலம் தமக்கான விடுதலை அடைந்தார்கள். அவ்வாறு விடுதலை அடைந்த யூத அரசு உலகெங்குமுள்ள யூதர்களின் பாதுகாப்புக் கவசமாகியது.

மேற்படி வரலாற்று அனுபவங்களிலிருந்து பொருத்தமான வகையில் படிப்பினைகளை பெற்று தமிழினத்தின் அடிமைத் தளையை உடைத்து எமது சந்ததியினரை இனப்படுகொலை களிலிருந்து பாதுகாக்கவும், அவர்களுக்கு புது வாழ்வு காட்டவும் எழுக தமிழா.

எமது பிள்ளைகளினதும் பிள்ளைகளின் பிள்ளைகளினதும், பேரப்பிள்ளைகளினதும், எதிர்காலச் சந்ததியினரதும் அறிவியல், விஞ் ஞான, பண்பாட்டு வளர்ச்சிக்கான கதவுகளை திறக்க எழுக தமிழா .

உலகளாவிய தரத்திலான தலைமுறையை உருவாக்கவல்ல தலைமுறையை உருவாக்க எழுக தமிழா.

பரந்த உலகம் தழுவிய மனிதகுல நாகரீக வளர்ச்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும், பங்களிப்புச் செய்ய எழுக தமிழா.

முழு உலகம் தழுவிய பூகோளக் கண்ணோட்டத்துடனும் மனிதகுல நாகரிகம் தழுவிய பரந்த கண்ணோட்டத்துடனும், புதிய தேசியவாதத்தை கட்டமைப்பு செய்ய எழுக தமிழா.

தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் சமூக—சாதி ஏற்றத்தாழ்வுகளை களையவும், ஒவ்வொரு மனிதனுக்குமான கௌரவம்மிக்க தலைநிமிர்ந்த வாழ்வையும் மற்றும் அனைவருக்குமான சம வாய்ப்பையும், சம சந்தர்ப்பத்தையும் உருவாக்க எழுக தமிழா.

அனைத்து வகையான மேலாதிக்கங்களை உடைக்கவும், புதிய சிந்தனையை உருவாக்கவும் எழுக தமிழா.

சனநாயகத்தைப் பற்றிப்பிடிக்கவும் அதனை உண்மையான மேம்பட்ட நிலைக்கு வளர்த்தெடுக்கவும் எழுக தமிழா.

தேசிய இன விடுதலையின்றி அடிமை வாழ்வின் கீழ் மேற்படி எத்தகைய வளர்ச்சிக்கும் இடமில்லை என்பதால் விடுதலை பெற எழுக தமிழா. விடுதலை அடைவதற்கு உகந்த வகையில் நடைமுறைக்குப் பொருத்தமானவெளியுறவுக் கொள்கையினை புத்தி பூர்வமாய் வடிவமைத்திட எழுக தமிழா.

கற்பனைகளை கைவிட்டு, மனோரம்யக் கனவுகளைக் களைந்து, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை கடந்து தமிழ் மக்களின் விடுதலைக்காக அறிவுபூர்வமாச் சிந்திக்க எழுக தமிழா.

எமது சந்ததியினரின் எதிர்காலம் எமது கையில் உண்டு என்ற பொறுப்புணர்வுடன் தமிழ் இனத்திற்கு புதுவாழ்வு படைத்திட எழுக தமிழா.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை உலகுக்கு பறைசாற்றவும், இனப்படுகொலையில் இருந்து விடுதலை அடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவும், உலக நாகரிகத்திற்கு பங்களிப்பு செய்யவல்ல உனது ஆளுமையை வெளிப்படுத்தும் வகையில் முதுகெலும்பை நிமிர்த்தி எழுக தமிழாஉனது தேவைகளை உலகுக்கு உணர்த்தவும் உனது ஆளுமையை வளர்க்கவும் வேண்டியதற்கான உன் வீரியத்தை காட்டவும் எழுக தமிழ் பேரணியில் பங்கெடுக்க எழுக தமிழா. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கென திரண்டு எழுக தமிழா.

# நாளை எழுக தமிழ்

**நிலாந்தன்**

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இம்மாதம் மூன்றாம் திகதியிலிருந்து பதினோராம் திகதி வரை ஓர் ஒளிப்படக் காட்சியோடு ஒரு விவரணப்படமும் திரையிடப்பட்டது. ஒளிப்படங்கள் ஸ்டீபன் சாம்பியனுடையவை. விவரணப் படத்தின் பெயர் குடில். தயாரித்தவர் கண்ணன் அருணாசலம்.

இப்படம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் பற்றியது. முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்பினால் தற்காலிகமாக கட்டப்பட்டிருக்கும் ஒரு சிறு குடிலை மையமாக வைத்து இப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. குடிலில் கிட்டத்தட்ட மூன்று பெண்கள் இருக்கிறார்கள். ஒரு மேசை இருக்கிறது. தவிர குடிலின் உட்சுவர்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய ஒளிப்படங்கள் ஒட்டப் பட்டுள்ளன.

ஒளிப்படக் கருவி குடிலின் உட்பகுதிக்குள் இருந்து வீதியை பார்க்கிறது. இதன் மூலம் அம்மூன்று பெண்களின் அன்றாட அசைவுகளையும் குடிலுக்கு வெளியே பிரதான வீதியில் நிகழும் போக்குவரத்தையும் கமரா ஒரே நேரத்தில் கவனிக்கிறது. சிலசமயங்களில் கமரா குடிலுக்கு வெளியே வருகிறது. அதில் அமர்ந்திருக்கும் பெண்களில் ஒருவர் தேநீர் தயாரிப்பதற்காக விறகு கொத்துவது, குடிலின் சுற்றுப்புறத்தைக் கூட்டுவது போன்ற காட்சிகளும் வருகின்றன. மூன்று பெண்களும் குடிலுக்குள் அதிகாலையிலிருந்து இரவு வரையிலும் என்ன செய்கிறார்கள் என்பதனை படம் வெளிக்கொண்டு வருகிறது. அவர்கள் தேநீர் தயாரிக்கிறார்கள். பத்திரிகை வாசிக்கிறார்கள். மேசையைச் சுற்றி இருந்து கதைக்கிறார்கள். இரவில் குடிலுக்குள் உறங்குகிறார்கள்.




குடிலுக்குள் இம்மூன்று முதிய பெண்களும் என்ன செய்கிறார்கள்?எதற்காக காத்திருக்கிறார்கள்? அவர்கள் ஏன் தமது வீடுகளில் தங்களுடைய குடும்பங்களோடு சேர்ந்து இருக்காமல் இப்படி வீதியோரமாக பாதுகாப்பற்ற ஒரு குடிலுக்குள் நாள் முழுக்க இருக்கிறார்கள்? போன்ற கேள்விகள் எதனாலும் தீண்டப்படாத ஒரு வாழ்க்கை குடிலுக்கு வெளியே பிரதான சாலையில் தன்பாட்டில் அசைகிறது.

கண்ணன் அருணாச்சலம் படத்தின் திரையை இரண்டாக பிரித்திருக்கிறார். ஒரு பகுதியில் கமரா குடிலுக்குள் நடப்பவற்றை காட்டுகிறது. இன்னொரு பகுதி பெருமளவுக்கு இருட்டாகவே காணப்படுகிறது. இடைக்கிடை அப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்கள் எழுச்சிகள் காட்டப்படுகின்றன. அவ்வாறான எழுச்சிகளின் போது தொகையான மக்கள் அங்கே பங்கு பற்றுகிறார்கள். ஊடகங்கள் அவர்களை மொய்த்து நிற்கின்றன. ஆனால் அது ஒருநாள் போராட்டம் அல்லது சில நாள் போராட்டங்கள். மற்றும்படி மேற்படி பாதித்திரை இருளாகவே காணப்படுகிறது.

இதன் மூலம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் ஏறக்குறைய சோர்ந்து போய்விட்டதை கண்ணன் வெளிக்கொண்டு வருகிறார். சில நாட்களில் நடக்கும் எழுச்சிகளை தவிர எல்லா நாட்களிலும் குடில் தனித்து விடப்பட்டிருக்கிறது. மூன்று புதிய பெண்களே அதற்குள் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். குடிலை ஊடகங்களும் கவனிப்பதில்லை. காலவரையறையற்ற அவர்களுடைய காத்திருப்புக்கும் குடிலுக்கு வெளியே அக்காத்திருப்பினால் தீண்டப்படாத ஒரு சகஜ வாழ்க்கைக்கும் இடையேயான முரண்பாட்டில் காணப்படும் அபத்தத்தை கண்ணன் வெளிக் கொண்டு வருகிறார்.

அந்தப் பெண்கள் அரசாங்கத்தால் மட்டுமல்ல, அனைத்துலக நிறுவனங்களால் மட்டுமல்ல, மனித உரிமை நிறுவனங்களால் மட்டுமல்ல, ஊடகங்களால் மட்டுமல்ல, தமது சொந்த கட்சிகளால் மட்டுமல்ல, தமது சொந்த மக்களாலும் கைவிடப்பட்டு விட்டார்களா? என்ற ஒரு கேள்வி படத்தைப் பார்த்து முடிக்கும்போது எழுகிறது. அக்கேள்வியில் நியாயம் உண்டு.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் 900 நாட்களை கடந்துவிட்டது. ஆனால் உருப்படியான தீர்வு எதுவும் கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடிய பெற்றோர்களின் 54 பேர் இதுவரை இறந்து விட்டார்கள். குறிப்பிட்ட தினங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்து போராட்டங்கள், எழுச்சிகள் ஒழுங்கு செய்யப்படும். ஆனால் அதற்குப் பின் கண்ணன் அருணாச்சலத்தின் படத்தில் காட்டப்படுவது போல குடிலில் குந்தியிருப்பது ஒரு சடங்கு போல் ஆகிவிட்டது.

அது ஏன் ஒரு சடங்காக மாறியது ? இதுபோன்ற போராட்டங்களை ஏன் மக்கள் மயப்படுத்த முடியவில்லை? இதுபோன்ற போராட்டங்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்ட மக்களை மையமாகக் கொண்டவை. போராட்டத்தை அரசறிவியல் ஒழுக்கமாக விளங்கிக் கொண்ட செயற்பாட்டு இயக்கங்களும், மக்கள் அமைப்புகளும், ஏன் இதுபோன்ற போராட்டங்களுக்குத் தலைமை தாங்க முடியவில்லை? குறிப்பாகத் தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்புகள் ஏன் இப்போராட்டங்களுக்கு தலைமை தாங்க முடியவில்லை? காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் மட்டுமல்ல காணிக்கான போராட்டம், அரசியல் கைதிகளுக்கான போராட்டம், ‘மகாவலி எல்’ வலையத்துக்கு எதிரான போராட்டம், மரபுரிமைச் சொத்துக்களை கவரும் நகர்வுகளுக்கு எதிரான போராட்டம், பௌத்த மயமாக்கலுக்கு எதிரான போராட்டம் போன்ற எல்லா போராட்டங்களையும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைத்து ஒரு பொது வழி வரைபடத்தின் படி அவற்றை முன்னெடுக்கவல்ல ஒரு அமைப்புக் கூட தமிழ் மக்கள் மத்தியில் இல்லையா?

இதுபோன்ற பல கேள்விகளின் மத்தியில்தான் நாளை ‘எழுக தமிழ்’ நடக்கவிருக்கிறது. இக்கேள்விகளுக்கு ஒருநாள் எழுக தமிழ் பதில் அல்ல. ஆனால் இக்கேள்விகளை முன்வைத்து பொருத்தமான ஒரு போராட்ட வடிவத்தை கண்டுபிடிப்பதற்கு அது ஒரு தொடக்கமாக இருக்கும். இக்கேள்விகளுக்கு பதில் கண்டுபிடிக்கத் தேவையான ஒரு வளர்ச்சியை பேரவை பெறவேண்டும், அல்லது பேரவையின் இடத்தில் ஒரு புதிய மக்கள் இயக்கம் உருவாக்கப்பட வேண்டும் என்று கருதும் அனைத்து தரப்புக்களும் எழுக தமிழை ஆதரிக்க வேண்டும்.

ஏனெனில் எழுக தமிழ் பேரவைக்குரியதல்ல. ஒரு கட்சிக்கு மட்டும் உரியதல்ல. அது தமிழ் மக்களுக்கு உரியது. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளின் பக்கம் நிற்கும் கட்சிகள் எழுக தமிழின் கனிகளை அறுவடை செய்யக்கூடும். அது தவிர்க்க முடியாதது. அதற்காக எழுத தமிழ்இரு கட்சிகளுக்குரியதாக இருக்கக்கூடாது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அப்படித்தான் முடிவெடுத்திருக்கிறார்கள். அதேசமயம் பேரவையை புனரமைப்பது என்பதனை எழுக தமிழை ஆதரிப்பதற்கான ஒரு முன்நிபந்தனையாக பல்கலைக்கழக மாணவர்கள் முன்வைக்கவில்லை. இது மிகவும் முதிர்ச்சியான ஓர் அணுகுமுறை. மக்கள் நேய அணுகுமுறை.

இதுபோலவே மக்கள் மைய நோக்கு நிலையிலிருந்து எழுக தமிழை அணுகும் ஒரு போக்கை கிளிநொச்சியிலும் காணமுடிகிறது. கடந்த வாரம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரன் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அதிபர்களோடு எழுக தமிழ் ஏற்பாட்டு குழுவைச் சேர்ந்த இருவரை சந்திக்க வைத்திருக்கிறார். அது எழுக தமிழுக்கான ஒரு சந்திப்பாக முன்னறிவிக்கப்படவில்லை. எனினும் நடைமுறையில் எழுக தமிழுக்கு பலம் சேர்க்கும் ஒரு சந்திப்பு அது.

நாளை நடக்கவிருக்கும் எழுக தமிழில் ரெலோ பங்கேற்கும் என்று கூறப்படுகிறது. ஆனால் தமிழரசுக் கட்சி கலந்து கொள்ளுமா? சிறீதரனைப் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கும் எழுக தமிழை மக்கள் மைய நோக்கு நிலையில் இருந்து பார்க்க வேண்டிய தேவை உண்டு.

பல்கலைக்கழக மாணவர்களே பேரணியை ஒழுங்கமைப்பார்களாக இருந்தால் அது கட்சி அடையாளங்களைக் குறைத்து விடும். எவ்வளவுக்கெவ்வளவு அதிக தொகை மக்களைத் திரட்டப் போகிறார்கள் என்பது எந்த அளவுக்கு முக்கியமானதோ அதே

**தொடர்ச்சி 12ம் பக்கம்**

# எழுக எழுக எழுக தமிழ்! எழுக எழுக எழுகவே!

உனது நிலம் - உனது மக்கள்,
உனது உயிர்கள் உனது எதிர்காலம்
உனது வாழ்வு - உனது உரிமை
உனது மொழி - உனது உயிர்
உன்னைச் சுற்றி உனக்காய் ஒரு தேசம்
உனது உழைப்பால் உருப்பெறவே
எழுக தமிழ் எழுகவே!

ஏக்கமும் எதிர்பார்ப்பும் தொலைந்து
போகட்டும்,
எழுதும் உன் விதியை
உன் எழுதுகோலே எழுதட்டும்
பார்க்குமிடமெல்லாம் படுத்துறங்கிக்கிடக்கும்,
பகைதுரத்திக் காலம்வெல்ல, எழுக தமிழ்
எழுகவே!

நீயிழந்தது நிலம் மட்டுமல்ல
நித்தியமான உன் புன்னகை வாழ்வும்தான்,
வாயடைத்துக் கிடக்கின்ற உலகின்முன்னே




வாய்மை வெல்லும் வலிமை படைக்க,
தீயெரித்த உன் தேசம் நினைத்து
எழுக தமிழ் எழுகவே!

இழந்ததற்கு நீதியில்லை, இழப்பதற்கோ
யாதுமில்லை,
பலந்தனிலே பிறப்பெடுத்த
வல்லமையும் இங்கு இல்லை, எனினும்
தளர்ந்து போகா மனவுறுதியோடு
தொலைந்துபோன வாழ்வை மீட்கும்
வல்லமையாய் எழுந்து நிற்க எழுக தமிழ்
எழுகவே!

ஆறாய் ஓடிய குருதியினால்பட்ட அவலமும்
அழுகையும் கண்ணீரும் இன்னமும்
முடியவில்லை !
நீறாய் எரிந்த எம் வாழ்வும் வளமும்
இன்றளவிலும் மீளவில்லை...
யார்யாரோ எல்லாம் உனக்கு
வாழ்வளிப்பார் என்ற புலம்பலை விட்டு விட்டு,
எழுக தமிழ் எழுகவே!

பலியிடவும்வேண்டாம், பழிச்சொல்லும்
வேண்டாம்,
கிலியது கொண்டு ஒளிந்திடவும் வேண்டாம்!
வலியது வெல்லும் வாழ்வினைப்பெறவே
புலியதன் மேன்மையிற் பொங்கு தமிழாய்
எழுக தமிழ் எழுகவே!

வரவுகள் ஒன்றும் வரம்தரவில்லை
வந்தவை ஒன்றும் விளங்கிடவில்லை
திறவுகோல் உன்கையினில் இருக்கின்றபோது,
வெறும்சொல்லால்
இனியும் பயனேதுமில்லை, ஆதலால்
துணிவு பெற்று துணை நிற்க
எழு எழு தமிழாய் எழுகவே!

கண்களில் துளியும் கண்ணீர் வேண்டாம்
கலக்கம் கவலை இனியும் வேண்டாம்
மண்ணின்மீது சத்தியம் செய்து,
மானம்காக்கும் மனத்திடம் கொண்டு,

விண்ணைமுட்டும் விடுதலை முழங்கிட
எழுக தமிழ் எழுகவே!

உன்னில் என்னில் பேதமை வேண்டாம்
உனக்குள் எனக்குள் பழிச்சொல் வேண்டாம்,
மண்ணின் மைந்தரில் பிரிவினை வேண்டாம்
மக்களைக் கட்சிகளாய்க் கூறிடவேண்டாம்
தன்னிலை அடையாளம் தமிழே தமிழே என்று
எழுக தமிழ் எழுகவே!

சிலுவைகள் சுமந்தது போதும்,
சிறகுகள் விரிந்திட வேண்டும்
சிறைகளில் நின்றும் விடுதலை வேண்டும்
உறவுகள் காக்கும் உன்னதம் வேண்டும்
நட நட தடைகள் உடைபடவே
எழு எழு தமிழே எழுகவே!

துயரது ஓடி ஒழியட்டும்,
துன்பங்கள் எமைவிட்டு அகலட்டும்
வியர்வையின் உழைப்பால் உயர்ந்திங்கு
வியத்தகு தேசம் படைத்திடவே
எழு எழு தமிழே எழுகவே!

மண்ணைத் தொட்டு மார்பில்பூசி
எழுக தமிழ் எழுகவே!
கண்ணைக்கட்டிக்காட்டில் விட்ட
இருளும் நீங்கிட எழுக எழுக எழுகவே!
திண்ணைப்பேச்சு தேவையில்லாதென
உலகமறிய எழுகவே!
நெஞ்சை நிமிர்த்தி, நேர்மை இருத்தி
எழுக தமிழ் எழுகவே!
தஞ்சம் உனக்கு நீயேதானென்று
தன்னம்பிக்கையோடு எழுகவே!

வஞ்சம் தின்ற வாழ்வை மீட்கும்
விடுதலைகாண எழுகவே!
அஞ்சும் எண்ணம் இனியும்வேண்டாம்
அறமே வெல்லும் எழுகவே!
விண்ணும் அதிர விடுதலை முழங்க
வாய்மை வெல்ல எழுகவே!
எழுக எழுக எழுக தமிழ்
எழுக எழுக எழுகவே!

---

11ம் பக்கத் தொடர்ச்சி **நாளை எழுக தமிழ்**

அளவுக்கு முக்கியமானது பேரணியில் ஆகக் கூடிய பட்சம் கட்சி அடையாளங்களைப் பின்தள்ள வேண்டும் என்பதும், இது விடயத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் பேரணியை முன்னெடுப்பது பொருத்தமாக இருக்குமா? ஏனெனில் அது ஒரு கட்சிக்கு வாக்களிக்கும் மக்களுக்கு மட்டும் உரியது அல்ல. அது கட்சி பேதங்களுக்கு அப்பால் தமிழ் மக்களுக்குரியது.

ஓர் அரசியல் கைதியின் பெற்றோர் எந்தக் கட்சிக்கும் வாக்களிக்கலாம். ஆனால் அரசியல் கைதிகளுக்கான போராட்டம் என்பது பொதுவானது. கட்சி கடந்தது. அதைப்போலவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டமும் கட்சிகளுக்கு உரியதல்ல. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எந்தக் கட்சிகளை சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். அவர்களுடைய உறவினர்கள் எந்தக் கட்சிக்கும் வாக்களிக்கலாம்.

ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் என்பது பொதுவானது. அப்படித்தான் மகாவலி எல் வலையத்துக்கு எதிரான போராட்டம், கன்னியா போராட்டம், செம்மலை பிள்ளையாருக்கான போராட்டம் போன்றவையும். இப்போராட்டங்களில் ஈடுபடும் மக்கள் எந்த கட்சிக்கும் ஆதரவாக இருக்கலாம். ஆனால் போராட்டம் ஒரு கட்சிக்குரியதல்ல. அது தமிழ் மக்களின் நீண்ட எதிர்காலத்துக்குரியது.

அப்படித்தான் எழுக தமிழும்.அது முன்வைக்கும் கோரிக்கைகள் பொதுவானவை. அக்கோரிக்கைகள் தமிழ் மக்கள் பேரவைக்கு மட்டும் உரியவை அல்ல. விக்னேஸ்வரனின் கட்சிக்கு மட்டும் உரியவை அல்ல. பிரதான தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகள் அவை. சில தமிழ் கட்சிகள் அவற்றை விக்னேஸ்வரனின் கோரிக்கையாக பார்க்கக்கூடும். ஆனால் சிங்களத் தலைவர்களும், கட்சிகளும், சிங்கள ஊடகங்களும் அவற்றை தமிழ் மக்களின் கோரிக்கைகளாகவே பார்க்கும். எழுக தமிழ் பொருத்தமான வெற்றிகளைப் பெறத்தவறினால் தமிழ் கட்சிகள் அதைப் பேரவையின் தோல்வியாக அல்லது விக்னேஸ்வரனின் வீழ்ச்சியாக கருதக் கூடும். ஆனால் தென்னிலங்கையில் அது தமிழ் மக்களின் தோல்வியாகவே பார்க்கப்படும். அனைத்துலக அளவிலும் அது அப்படித்தான் பார்க்கப்படும்.

2009க்கு பின் தமிழ் மக்களை ஒரு பெருந்திரளாக திரட்டுவதில் சவால்கள் அதிகம். பொங்குதமிழ்களை நடத்திய ஒரு மக்கள் கூட்டம் சிறிய அளவில் எழுக தமிழ்களை நடத்த வேண்டி இருப்பது என்பது ஒருவிதத்தில் வீழ்ச்சி. தென்னிலங்கையில் கோத்தபாயவும், சஜித் பிரேமதாசவும், அனுரகுமார திசநாயக்கவும் திரட்டும் பெரும் கூட்டத்தோடு ஒப்பிடுகையில் எழுக தமிழ் மிகவும் சிறியது. ஆனால் 2009 க்குப் பின்னரான வெற்றிடத்தில் வைத்துப்பார்த்தால் எழுக தமிழ் ஒரு முன்னேற்றம். அது தமிழ் மக்களைத் திரள் ஆக்குகிறது. தேசியம் எனப்படுவது அதன் பிரயோக நிலையில் மக்களைப் பெருந் திரள் ஆக்குவதுதான். சனநாயக அடிச்சட்டத்தின் மீது தமிழ் மக்களைப் பெருந்திரள் ஆக்குவதுதான்.

தேசம் என்றால் ஒரு பெரிய மக்கள் திரள் என்று பொருள். ஒரு மக்கள் கூட்டத்தை நிலம், இனம், மொழி, பண்பாடு, பொதுப் பொருளாதாரம் போன்றவை திரள்ஆக்குகின்றன. இவ்வாறு மக்கள் ஒரு திரளாக இருப்பதை அதாவது தேசமாக வாழ்வதை அழிப்பதுதான் இனப்படுகொலை.

ஒரு மக்கள் கூட்டத்தைத் திரளாக்கும் அடிப்படை மூலக்கூறுகளான நிலத்தை அபகரித்து மக்களை, பண்பாட்டைச் சிதைத்து அந்த மக்களைக் கூறுபோடும் எல்லா அம்சங்களும்திரளாகத்துக்கு எதிரானவை. அதாவது தேசமாக வாழ்வதற்கு எதிரானவை. இப்படிப் பார்த்தால் எழுக தமிழ் ஆனது தமிழ் மக்களைத்திரள் ஆக்குகிறது.

அது பொங்கு தமிழ் போல மிகப்பெரும் திரள் இல்லைத்தான். ஆனாலும் 2009 க்குப் பின்னரான கூட்டுச்சோர்வு மனப்பான்மை, கூட்டுத் தோல்வி உணர்வு, கூட்டுக் காயங்கள், கூட்டு மனவடுக்கள் என்பவற்றின் பின்னணியில் கூறின் எழுக தமிழ் ஒரு முன்னோக்கிய அடிவைப்பு.

இனப் படுகொலையின் சாம்பலிலிருந்தும், எஞ்சியிருப்பவர்களின் கூட்டுக் காயங்கள், கூட்டு மனவடுகள், கூட்டு அவமானம் என்பவற்றிலிருத்து தமிழ் மக்கள் திரும்பத் திரும்ப எழுவார்கள் என்பதை அது உலகத்திற்குக் காட்டும். அதில் எவ்வளவுக்கு எவ்வளவு மக்கள் திரள்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அது கூறும் அரசியல் செய்தியின் தாக்கமும் அதிகரிக்கும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் உட்பட பாதிக்கப்பட்ட மக்களின் அனைத்துப் போராட்டங்களும் அவற்றின் அடுத்த கட்டக் கூர்ப்பை அடைவதற்கு அது உந்து விசையாக அமையும்.

# இலங்கைச் சித்திரவதைகள் தொடர்பில் மற்றுமொரு அறிக்கை

## சூக்கா விசேட உரையும் நிகழ்த்துவார்



இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகள் தொடர்பிலான சாட்சியப் பதிவுகளுடன் கூடிய தகவல்களை உள்ளடக்கிய மற்றுமொரு ஆவணத்தினை உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பு எதிர்வரும் புதன்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் வளாகத்தில் வெளியிடவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 42ஆவது கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்ற நிலையில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பின் ஏற்பாட்டில் பக்க நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் குறித்த அறிக்கை வெளியிடப்படவுள்ளதோடு அமெரிக்காவின் போர்குற்றங்கள் தொடர்பான முன்னாள் தூதுவர் ஸ்டீபன் ரப் தலைமையில் நடைபெறவுள்ள விசேட ஆய்வுரை நிகழ்வில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பின் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, அவ்வமைப்பின் செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் பிரான்ஸஸ் ஹரீசன் மற்றும் புலனாய்வாளர் வான்டர் ஸ்டாடென் பொந்தோஷ் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

# எழுக தமிழை முடக்க ஆளுநர் முனைப்பு!

நாளை மறுதினம் (16) எழுக தமிழ் பேரணி இடம்பெறவுள்ளது. இதற்கு பல தரப்பினரும் ஆதரவு வழங்கியுள்ளதுடன், கடையடைப்பு கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாளைய தினம் வட மாகாணப் பாடசாலைகள் அனைத்தும் வழமை போல் இயங்கும் என்று ஆளுநர் சுரேன் ராகவன் இன்று (14) தெரிவித்துள்ளார். இது எழுக தமிழை முடக்கும் நோக்கமாகவே இருக்கும் என கருதப்படுகிறது.

2ம் பக்கத் தொடர்ச்சி எழுக தமிழ் பேரணியில் பங்கேற்பது...

ஒருங்கிணைத்து அவர்களுடைய கோரிக்கைகளை சர்வதேசத்துக்குக் கொண்டு செல்வதும், அதன் மூலம் அரசுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதும் இதன் இலக்கு. தமிழ் மக்கள் பேரவை யாழ்ப்பாணத்தில் இந்த எழுச்சியை ஏற்பாடு செய்திருக்கும் அதேவேளையில், தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இது போன்ற நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் குறிப்பிட்ட கோரிக்கைகளையிட்டு சர்வதேச ரீதியான அவதானத்தைப் பெறமுடியும். தாயகத்திலுள்ள மக்களும், புலம்பெயர்ந்திருக்கும் மக்களும் இணைந்து பயணிக்க வேண்டிய அவசியத்தின் பிரதிபலிப்பு இது. கட்சி அரசியல் சாராமல் சிவில் அமைப்புக்கள் ஏற்பாடு செய்யும் இந்தப் பேரணியில் அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் அனைத்துத் தரப்பினரும் பங்குகொள்ள வேண்டும். கட்சிகள் தங்களுடைய தனிப்பட்ட அடையாளங்களை ஒதுக்கிவைத்துவிட்டு பொதுவான கோரிக்கையின் அடிப்படையில் இணைந்து செயற்படவேண்டும்.

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் மேற் கொள்ளப்பட்டு வரும் நில ஆக்கிரமிப்பு, சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் ஏற்பட்டுள்ள தேங்கு நிலை, அரசியல் கைதிகளின் விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான நம்பத்தகு விசாரணைகள் நடைபெறாமை, இராணுவ மயமாக்கல் மற்றும் மீள் குடியமர்வு போன்ற ஆறு விடயங்கள் தொடர்பில் நியாயம் கோரி சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த பேரணி நடைபெறுகின்றது.

மக்கள் மயப்பட்ட போராட்டங்கள் மூலமாக மட்டுமே பிரச்சினைகளை வெளிக்கொணர முடியும். கடந்த காலங்களில் இவ்வாறான போராட்டங்கள் வெற்றிபெறாமைக்கு கட்சி நலன்சார்ந்த அரசியல் காரணமாக இருந்திருக்கின்றது. கட்சி முரண்பாடுகளைத் தவிர்த்து தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்த அபிலாசைகளை வெளிப்படுத்தும் வகையில் அனைவரும் இந்தப் பேரணியில் பங்கேற்க வேண்டும். வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக பல போராட்டங்கள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, கைதிகள் பிரச்சினை, காணி மீட்புப் போராட்டங்கள் என இவை தனித்தனியாக நடைபெறுகின்றன. இவை அனைத்தும் இணைக்கப்பட்டு மக்கள் மயமான தொடர்ச்சியான போராட்டங்கள் மூலமாகவே அரசியலரங்கில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அதற்கான முதலாவது நகர்வாக நாளைய போராட்டம் அமையவேண்டும்."

2ம் பக்கத் தொடர்ச்சி தமிழினத்தின் விடியலுக்கான...

உள்ளிட்ட அரசியல் கட்சிகளும் தமிழ் மக்கள் பேரவை, தமிழ் சிவில் சமூக அமையம், மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு, வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம், மட்டக்களப்பு சிவில் சமூகம், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், மாணவர் சங்கம், ஊழியர் சங்கம், கிழக்கு மாகாண கலைப்பீட மாணவர் ஒன்றியம், நல்லை ஆதீனம், தென் கயிலை ஆதீனம், சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் உள்ளிட்ட சமயத் தலைவர்கள், வணிகர் சங்கத்தினர், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள், தனியார் போக்குவரத்து சங்கத்தினர், முச்சக்கரவண்டி சங்கத்தினர், கிராமிய சங்கத்தினர், கிழக்கு மாகாண பொது அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் என பலதரப்பட்ட தரப்பினரும் தமது பேராதரவையும், பங்களிப்பையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

### தொப்புள் கொடி உறவுகளின் உணர்வழைப்பும் கவனயீர்ப்பும்

தொல்.திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியும், கொளத்தூர் மணி தலைமையிலான ஈழத்தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பும், வேல்முருகன் தலைமையிலான தமிழக வாழ்வுரிமை கட்சியும், வைகோ தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகமும், சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ் தலைமையிலான முக்குலத்தோர் புலிப்படை அமைப்பினரும், இயக்குநர் கௌதமன் தலைமையிலான தமிழ் பேரரசுக்கட்சியும், சென்னை வழக்கறிஞர்கள் சங்கம், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை ஆதரவு வெளியிட்டுள்ளனர். அனைத்து தமிழ்நாடு மாணவர் சங்கம்—சென்னைப் பல்கலைக்கழக மாணவர்களும் உள்ளிட்ட பல்வேறு சிவில் அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளதோடு தாயகத்தில் நடைபெறும் எழுக தமிழ் எழுச்சிப்பேரணிக்கு வலுச்சேர்க்கும் வகையில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில், நாளை காலை 10மணிக்கு 'உரிமைகளை மீட்போம் இன அழிப்புக்கு நீதி கேட்போம்' எனும் தொனிப்பொருளில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் ஏற்பாட்டில் மாபெரும் கவயீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

### புலம்பெயர் அமைப்புக்களின் ஆதரவும் பாரிய கவனயீர்ப்புப் போராட்டங்களும்

அனைத்துலக ஈழத் தமிழர் உரிமை மையம், அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் உள்ளிட்ட பல்வேறு புலம்பெயர் அமைப்புக்களும் எழுக தமிழ் எழுச்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளதோடு புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் செறிவாக வாழும் அமெரிக்கா, லண்டன், கனடா ஆகிய நாடுகளின் முக்கிய நகரங்களில் தாயகத்தில் நடைபெறும் எழுச்சிப்பேரணிக்கு வலுச்சேர்க்கும் முகமாக கவனயீர்ப்பு போராட்டங்களும் ஏற்பாடாகியுள்ளன. விசேடமாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 42ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவிலும், பொதுச்சபை கூட்டத்தொடர் நியூயார்க்கிலும் நடைபெற்று வரும் நிலையில் ஐ.நா உட்பட சர்வதேசத்தின் கவனத்தினை ஈர்க்கும் வகையில் இரண்டு வளாக முற்றத்திலும் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது.

### பேரவையின் கோரிக்கை

மேலும் தயாக உறவுகளின் இருப்பினை உறுதிப்படுத்தும் முனைப்பினைக் கொண்டு முன்னெடுக்கப்படும் எழுக தமிழ், மக்கள் எழுச்சிப் பேரணிக்கு அனைவரது பங்கேற்பை உறுதி செய்யும் வகையில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்களையும் தாயக உறவுகள் அனைத்தும் கைவிட்டு பூரண ஹர்த்தாலைக் கடைப்பிடிப்பதற்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு அனைத்து தரப்பினரிடத்திலும் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளது.

8ம் பக்கத் தொடர்ச்சி எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில்

போர்க்குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றில் முன்னிறுத்த வலியுறுத்தியும், அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாத்தில் உரிய தீர்வினை பெற்றுத்தர வலியுறுத்தியும், திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புக்களை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களினை மேற்கொண்டு வருகின்ற நிலையில் அத்தகைய போராட்டங்களினை கண்டு கொள்ளாது தென்னிலங்கை அரசியல்வாதிகள் தாம் ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்றுவதிலேயே அதிக கரிசனை செலுத்துவதோடு அதற்காக போர்க்குற்றங்களோடு தொடர்புடையவர்களினை முன்னிலைப்படுத்தும் போக்கும் காணப்படுகின்றது.

இதனை தட்டிக்கேட்கும் திராணி தமிழ்த்தேசிய பரப்பில் உள்ளவர்களிடம் இல்லாதுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும். எனவே இன்றைய தேர்தல் கால சூழலினை கையாளுவதற்கு எழுக தமிழ் மக்கள் எழுச்சி ஓர் காத்திரமான செய்தியினை தென்னிலங்கைக்கு வழங்க இம்மக்கள் எழுச்சியினை பலப்படுத்த வேண்டும். தமிழ்த் தேசியத்தின் மீது உண்மையான அக்கறை கொண்டவர்கள் எவருமே இத்தகைய மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்காமல் பின்னடிக்க முடியாது என்பதனாலேயே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் எமது பூரண ஆதரவினை வழங்க முன் வந்துள்ளோம். அது போல தமிழ்தேசியத்தினை நேசிக்கும் தரப்புகள் பாகுபாடுகளினை மறந்து தமிழ்த்தேசியத்தினை வலுப்படுத்த அணி திரளவேண்டும்.